Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, APRIL 4, 2022

திங்கட்கிழமை ஏப்ரல் 04, 2022 | ஒளி: 07 கதிர்: 273 | பக்கம்:10 | வடக்கு,கிழக்கு | Free



## மஹிந்தவின் மருமகள் நாட்டைவிட்டு பறந்தார்?

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் மனைவியான லிமினி ராஜபக்ஷ மற்றும் அவரது பெற்றோர்கள் நேற்று (03) நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2

## நாமல் விளக்கம்

தனது மனைவியும் அவரது குடும்பத்தினரும் நாட்டை விட்டு வெளியேறவில்லை. அவர்கள் ஒருபோதும் தப்பிச் செல்ல மாட்டார்கள் என்று தெரிவித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஓர் ஐரோப்பிய நாட்டுக்கு சுற்றுலாவுக்குச் சென்றுள்ளனர். தனது குடும்பத்தினர் கடந்த 38 ஆண்டுகளாக சுற்றுலா வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் ராஜபக்ஷ தெரிவித்தார்.

# 24 மணி நேரத்துக்குள் ஆட்சியில் மாற்றம்

இன்னும் 24 மணிநேரத்துக்குள் ஆட்சியில் மாற்றமொன்று ஏற்படுத்தப்படக்கூடுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதுதொடர்பில் அரசாங்கத்தின் உயர்மட்டத்தின் தீர்க்கமாக கலந்துரையாடிவருகின்றனர் என அறியமுடிகின்றது. ஆட்சி மாற்றம் தொடர்பில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பலதரப்பு சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன.

முன்னதாக, பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தலைமையில், அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, எம்.பிக்களான உதய கம்மன்பில, டிரான் அலஸ் ஆகியோர், ஜனாதிபதியின் அழைப்பின் பேரில், நேற்றுமுன்தினம் (02) ஜனாதிபதியை சந்தித்தனர். அதன்பின்னர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை, நேற்று (03) சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இவ்விரு சந்திப்புகளின் போது, நாட்டின் தற்போதைய நிலைமையை எடுத்துகூறியதுடன், அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு இன்றேல் பெரும்பான்மையான கட்சிகளை இணைத்துக்கொண்டு இடைக்கால அரசாங்கமொன்றை நிறுவுமாறு கேட்டுள்ளனர். அதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## மின்வெட்டு நேரம் இன்னும் குறையும்

மின்வெட்டு அமல்படுத்தப்படும் நேரத்தை இன்னும் சில நாள்களில் குறிப்பிடத்தக்களவு குறைப்பதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின் உற்பத்திக்கு போதுமானளவு எரிபொருளை ஒதுக்குவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் எழுத்துமூலம் உறுதிப்படுத்தியுள்ளார் என்று ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இந்திய கடனுதவியின் 12,000 மெட்ரிக் தொன் டீசல் நாட்டை வந்தடையவுள்ளதாக அவர் கூறியுள்ளார். இதனிடையே, சொஜிஸ்ட் மின்னுற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி நடவடிக்கைகள் நேற்று (03) மீள ஆரம்பிக்கப்படவிருந்தன என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அந்த மின் உற்பத்தி நிலையத்திற்கு தேவையான டீசல் கிடைத்துள்ளது என்று இலங்கை மின்சார சபையின் பதில் முகாமையாளர் கலாநிதி ரோஹந்த அபேசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஊரடங்கு உத்தரவை உதறித் தள்ளிய மக்கள்



கறுப்புக் கொடிகளையும் தொங்கவிட்டனர்

மதில்களில் ஏறி ஆர்ப்பாட்டம்

கொழும்பு வாசிகள் வீதிக்கு இறங்கினர்

நாட்டின் பல பகுதிகளில் போராட்டம்

நாட்டில் சனிக்கிழமை (02) மாலை 6 மணியிலிருந்து இன்று திங்கட்கிழமை (04) காலை 6 மணிவரை ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டிருந்த நிலையில், அதனைப் பொருட்படுத்தாது நேற்றையதினம் (03) பல பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2



### 53 வயதான நபரொருவர்

## ஜனாதிபதியின் வீட்டுக்கு முன் உயிரை மாய்த்தார்

### மின்மாற்றியில் ஏறி மின் தாக்கி மரணம்

மிரிஹானையிலுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட வீட்டுக்கு முன்பாகவுள்ள மின்மாற்றியில் ஏறிய 53 வயதுடைய ஆணொருவர், மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என, மிரிஹான பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

### 4 மாகாணங்களிலுள்ள

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

### கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் விடுமுறை

வடக்கு, கிழக்கு, தெற்கு, வடமேல் மாகாணங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இன்றையதினம் (04) விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, நேற்று (03) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## ஆஸியிலும் நியூசியிலும் கோட்டாவுக்கு எதிர்ப்பு

இலங்கை அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் முக்கிய நகரங்கள் சிலவற்றில், நேற்று (03) போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

### பல்கலைக்கழக மாணவர்களால்

## பேராதனையில் பெரும் போராட்டம்



■ சேஹ்ன் செனவிரத்ன

பேராதனை பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று (03) பகல் ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்பு பேரணியை தடுக்க, கலஹா முச்சந்தியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நடவடிக்கை எடுத்தமையால், மாணவர்கள் நான்கு மணித்தியாலம் முன்னெடுத்த போராட்டத்தை முடித்துக்கொண்டு பல்கலைக்கழகத்துக்கு திரும்பினர்.

தொடர்ச்சி P2



## எதிர்க்கட்சியால் வெண்ணிற ஆடைப் போராட்டம்

அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் கொழும்பு, சுதந்திர சதுக்க வளாகத்துக்குள் நேற்று (03) நுழைய முற்பட்டபோது பதற்றநிலை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்ட நிலைமையைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினர் முற்பட்ட போது அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தைமையையும் அவதானிக்க முடிந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர், கொழும்பு மார்க்கஸ் பெர்ணான்டோ மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் ஒன்று திரண்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

## மஹாநாயக்கர்கள் கூட்டறிக்கை வெளியீடு

■ சேஹ்ன் செனவிரத்ன

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பில் அஸ்கிரி மற்றும் மல்வத்து பீடங்களில் மஹாயக்க தேரர்கள் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயக்கர் திப்பட்டவாவே சுமங்கல தேரர், மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட தேரர் ஆகியோரின் கையொப்பத்துடன் நேற்று முன்தினம் (02) வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தொடர்ச்சி P2

# சமூக வலைத்தளங்கள் 15 மணிநேரம் முடங்கின

### முடக்கத்துக்கு இணங்கவில்லை நாமல்



பாதுகாப்பு அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க, சமூக வலைத்தளங்களின் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர், நேற்று (03) காலை அறிவித்திருந்த நிலையில், அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய சுமார் 15 மணி நேரத்துக்குப் பின்னர் பிற்பகல் 3.30 மணியளவில் மீண்டும் இயங்கத் தொடங்கின. நேற்று (03) நள்ளிரவு முதல்முக்கிய சமூக வலைத்தளங்களான பேஸ்புக், யூடியுப், இன்ஸ்டாகிராம், இன்டகிராம், வாட்ஸ்அப் உள்ளிட்டவை முடக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

### சமூக ஊடகங்களை

## முடக்கியமை மனித உரிமை மீறல்

சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டமை மனித உரிமை மீறலாகும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க, நேற்று (03) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மக்கள் பாதுகாப்புக்கே இரு சட்டங்களும் அமல்



பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு மாத்திரமே அவசரகால சட்டம், ஊடரங்குச் சட்டம் ஆகியவை அமல்படுத்தப்பட்டுள்ளன என்று அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க, நேற்று (03) தெரிவித்தார்.

பணிப்பாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தாவது,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 24 மணிநேரத்தில் ஆட்சியில் மாற்றம்

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று (03) கருத்துரைத்த விமல் வீரவன்ச எம்.பி., தற்போதைய அமைச்சரவையை கலைக்க வேண்டும். அதன்பின்னர், இடைக்கால அரசாங் கமொன்றை நிறுவி ஆட்சியை முன்னெடுக்கவேண்டும். அதனூடாக மக்களிடத்தில் ஓரளவு நிம்மதியை ஏற்படுத்த முடியும். அதற்குப் பின்னர் தேர்தலுக்குச் செல்லாம் என்றார்.

அப்படியாயின், பிரதமர் பதவி தொடர்பில் பிரச்சினைகள் எழுமல்லவா? என வினவியதற்கு பதிலளித்த விமல், " பிரச்சினைகள் ஏற்படலாம், எனினும் எமது தரப்பிலிருந்து பிரதமர் பதவிக்கு யாராவது முன்மொழியுமாறு கேட்டால், நாங்கள் முன்மொழிவோம். அடுத்த பொதுத்தேர்தல் எப்போது நடத்தப்படலாம் எனக் கூறமுடியாது. எனினும், மெழுவர்த்தியை வைத்துக்கொண்டு தேர்தல் நடத்தமுடியாது என்றார். இதேவேளை, ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, காபந்து அரசாங்மொன்றை நிறுவுமாறு கோரியுள்ளது. அதற்கு சாதகமான பதில் கிடைக்காவிடின், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 14 பேரும் பாராளுமன்றத்தின் சுயமாக ஈடுபட தீர்மானத்தை எட்டுவோம் என்றும் தெரிவித்துள்ளது. இவ்வாறான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதால், ஆட்சியில் மாற்றம் ஏற்படலாமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மஹிந்தவின் மருமகள் நாட்டைவிட்டு பறந்தார்?

அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்புக்களுக்கு மத்தியிலேயே லிமினி ராஜபக்ஷவும் அவரது பெற்றோரும் நாட்டை விட்டு வெளியேறி பெயர் குறிப்பிடப்படாத இடத்துக்குச் சென்றுள்ளனர் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மற்ற இரு மருமகள்களும் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது

## மின்வெட்டு நேரம் இன்னும் குறையும்

அதனடிப்படையில், மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் (02) மீள ஆரம்பிக்கப்பட்டன. இதில் இருந்து 270 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

# உதறித் தள்ளிய மக்கள்

பேராதனை மற்றும் கொழும்பில் எதிர்க்கட்சி நடத்திய ஆர்ப்பாட்டங்களுடன், மஹரகம, மாலபே, நீர்கொழும்பு, பொரலஸ்கமுவ விஜேராம சந்தி, நாவல, கல்கிஸை உட்பட பல இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நிக்கவரெட்டிய தள வைத்தியசாலை ஊழியர்கள் சிலர் மதில்களில் ஏறி பதாகைகளுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

சில இடங்களில் பெருந்திரளான மக்களும் சில இடங்களில் குறைந்தளவான மக்களும் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான பதாகைகளுடன் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய 15 மணி நேரம் வரை சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டிருந்த போதும் விபிஎன்ஐப் பயன்படுத்தி சமூக ஊடகங்களிலும் எதிர்ப்புப் பிரசாரங்களை பலர் பதிவிட்டிருந்தனர்.

சமூக ஊடகங்களில் வெளியிட்ட படங்களின் மூலமே போராட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கை குறித்து தகவல்கள் வெளியிடப்பட்டன.

மேலும், வீடுகள் மற்றும் தெருக்களில் கறுப்புக் கொடிகளைத் தொங்க விட்டு, அவற்றை புகைப்படம் மற்றும் காணொளி எடுத்து சமூக ஊடகங்களில் பதிவிட்டிருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது.

நேற்று பிற்பகல் 4 மணிக்குப் பின்னர், அநேகமான கொழும்பு வாசிகள் தமது அயலவர்களுடன் இணைந்து தமது வீடுகளுக்கு வெளியேயும் வீதிகளிலும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

## ஜனாதிபதியின் வீடுக்கு முன் உயிரை மாய்த்தார்

சமூக வலைத்தளங்களை முடக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (03) பிற்பகல் குறித்த நபர் மின்மாற்றியில் ஏறிய பொழுது மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மஹரகம - நுகேகொட வீதியில் எதிரிசிங்க மாவத்தை சந்தியில் மின்மாற்றியுடன் கூடிய மின்கம்பத்தில் ஏறி உயிரிழந்தவர், மிரிஹான எதிரிசிங்க வீதி 1ஆம் ஒழுங்கையில் வசிக்கும் நாணயக்கார போபே ருவன் வீரதுங்க (வயது 53) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவத்தை அவரது மகன் நேரில் பார்த்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளதுடன், களுபோவில போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆஸியிலும் நியூசியிலும் கோட்டாவுக்கு எதிர்ப்பு

அவுஸ்திரேலியாவின் சிட்னி, மெல்பேர்ண், பேர்த், அடிலைட் நகரங்களிலுள்ள புலம்பெயர் இலங்கையர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், நியூசிலாந்தின் ஒக்லான்டிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில், அரசாங்கம் மற்றும் ஜனாபதி கோட்டாபயவுக்கு எதிரான பல்வேறான வாசங்களை மக்கள் ஏந்தியிருந்தனர். மெர்பேர்ண் நகரில் பாரியளவான ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், “இளைஞர்கள் எங்களுக்கு நாடு வேண்டும்“ என்று கோஷங்களை எழுப்பியவாறு இலங்கை இளைஞர்கள் உட்பட பலர் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## சமூக வலைத்தளங்கள் 15 மணிநேரம் முடங்கின

இதேவேளை, சமூக வலைத்தள முடக்கத்தை நீக்குமாறு இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு, நேற்று (03) கோரிக்கை விடுத்துள்ளது.

மின் துண்டிப்பு தொடர்பில் நுகர்வோருக்கு தகவல்களை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் உடன் அமுலாகும் வகையில் சமூக வலைத்தளங்கள் மீதான முடக்கத்தை நீக்குமாறு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

செயற்பாட்டை மீள ஆரம்பிக்குமாறு தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் அனைத்து அலைபேசி சேவை வழங்குநர்களிடம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு கோரிக்கை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சமூக வலைத்தளங்களுக்கு தடை விதிக்கப்பட்டமையுடன் தாம் இணங்கவில்லை எனத் தெரிவித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, நெருக்கடிகளை உருவாக்காமல், பிரச்சினைகளுக்கான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்கள் மீதான தடைக்கு மேலே சென்று முறையான நடைமுறையொன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் VPN ஊடாகவே தாமும் சமூக வலைத்தளங்களுக்குள் பிரவேசிப்பதாகவும் தனது டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பேராதனையில் பெரும் போராட்டம்

சுமார் 800 மாணவர்கள் வரை இந்த எதிர்ப்பு பேரணியில் கலந்துகொண்டதுடன், அரசாங்கத்துக்கு எதிராக எழுதப்பட்ட பதாகைகளுடன் கண்டி நகருக்கு செல்ல முயன்றபோது, பொலிஸாரும் இராணுவத்தினரும் அதற்கு தடையை ஏற்படுத்தினர். சுமார் 4 மணித்தியாலங்கள் மாணவர்கள் கலஹா வீதியில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததுடன், 2 மணியளவில் பொலிஸ் பாதுகாப்பு தடையை உடைத்தெறிந்து, கண்டி நகரை நோக்கி முன் செல்ல எடுத்த முயற்சிகள், பாதுகாப்பு தரப்பினரால் முறியடிக்கப்பட்டன. இதன்போது பொலிஸாரின் வீதித் தடைகளை உடைத்தெரிந்த மாணவர்கள் முன்னாக்கி செல்ல ஆரம்பித்த நிலையில், நீர்த்தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் தமது ஆர்ப்பாட்டத்திலிருந்து பின்வாங்கி பல்கலைக்கழகத்துக்கு சென்றனர்.

இதேவேளை, குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட போது, அந்த பிரதேசத்தில் மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டதால், தொடர்பாடல் பிரச்சினைகளுக்கு சகலரும் முகங்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

பாடசாலைகளின் ஆசிரியர்கள் சேவைக்கு சமூகமளிக்க வேண்டும் எனவும் செயலாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய மாகாணங்களின் பாடசாலை மாணவர்கள் தவணைப் பரீட்சைக்கு மாத்திரம் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும் எனவும் கபில பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக மேல் மாகாணத்திலுள்ள அனைத்து கத்தோலிக்க பாடசாலைகளும் அடுத்த வாரம் மூடப்படும் என கத்தோலிக்க பாடசாலைகளின் பணிப்பாளர் அருட்தந்தை கெமுனு டயஸ் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து கத்தோலிக்க தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகள் இன்று முதல் 8ஆம் திகதி வரை மூடப்படும் என்று சகோ. டயஸ் தெரிவித்தார்.

## முடக்கியமை மனித உரிமை மீறல்

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் எவ்வித மதிப்பீடும் செய்யாமல் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியமையும் மனித உரிமை மீறல் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் நேற்று (03) கலந்துகொண்ட விசேட சந்திப்பில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மஹாநாயக்கர்கள் கூட்டறிக்கை வெளியீடு

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு காரணமாக நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் இன்று எதிர்கொண்டுள்ள சிரமங்களினால் மகாசங்கத்தினர் மிகவும் கவலையடைவதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இத்தருணத்தில், மக்கள் மீதான பொருளாதார அழுத்தத்தை குறைக்கும் வகையில், அரசாங்கத்தின் அனைத்து தேவையற்ற செலவீனங்களையும் அகற்றி, மக்களின் நலனுக்காக தியாகம் செய்யுமாறு மகாநாயக்கர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். மேலும், தமது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களை மறந்து இன, மத கட்சி பேதமின்றி தேசிய கொள்கையை வகுப்பதன் ஊடாக இந்த நெருக்கடிக்கு தீர்வுகாண ஒன்றிணைந்து செயற்படுவது மிகவும் முக்கியமானது என மாநாயக்க தேரர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சியால் வெண்ணிற ஆடைப் போராட்டம்

வெள்ளைநிற ஆடையை அணிந்திருந்த அவர்கள், ஜனநாயகத்தை நிலைநிறுத்துமாறு கோரியே அமைதியான முறையில், காரியாலயத்துக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காரியாலயத்தில் இருந்து வெளியேறியவர்கள் சுதந்திர சதுக்கம் வரையிலும் பேரணியாக சென்றபோது அங்கு வீதித்தடை போட்டப்படிருந்த நிலையில், அதனையும் மீறி செய்வதற்கு முயன்றபோதே, அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

நாட்டில் அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள வேளையில் இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பது முறையற்றது என பொலிஸார் குறிப்பிட்டனர்.

## பாதுகாப்பு அதிகரிப்பு

துசித குமார டி சில்வா



இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்தவின் இல்லத்துக்குக் கூடுதல் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் நேற்று (03) ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அளுத்கம பொலிஸ் பிரிவில் உள்ள இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்தவின் இல்லத்துக்கு செல்லும் இரு வழிகளிலும் பொலிஸ் வீதித் தடை அமைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. இராஜாங்க அமைச்சரின் வீட்டில் இருந்து நூறு மீற்றர் தூரத்துக்கு முன்பாக காலவில வீதியின் இரு இடங்களில் பொலிஸ் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.




## டா...டா...

கொழும்பில் உள்ள பிரதேசவாசிகள் பலர் தமது வீடுகளுக்கு முன்பாகவும், வீட்டை விட்டு வெளியேறியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## மக்கள் பாதுகாப்புக்கே இரு சட்டங்களும் அமுல்

அமைதியையும், பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையைப் பேணவும், பொதுச் சொத்துக்கள் மற்றும் தனியார் சொத்துக்களைப் பாதுகாக்கும் ஒரே நோக்கத்திற்காகவே அவசரகால சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பேச்சு சுதந்திரம், கருத்துத் தெரிவித்தல் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான சுதந்திரத்தைப் போலவே நாட்டில் அமைதி மற்றும் அரச, தனியார் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான கடப்பாடும் அரசாங்கத்திற்கு உண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது.

பேச்சுச்சுதந்திரம், கருத்துத் தெரிவித்தற் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்குமான சுதந்திரம் உள்ளிட்ட ஜனநாயக ரீதியான உரிமைகளை உறுதிப்படுத்தி ஊக்குவிப்பது அரசாங்கம் உறுதிமொழி வழங்கி அங்கீகரித்திருக்கின்ற கொள்கையாகும். கடந்த இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலத்தில் அது நடைமுறை ரீதியாக





# 74 வருட சாபக்கேட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்

ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்த நிலையிலும் அரசாங்கத்துக்கு எதிராக, தேசிய மக்கள் சக்தியினர் நேற்று (03) மஹரகமவில் போராட்டத்தில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம்

# நாமலிடம் நட்டஈட்டை கோருகிறது

## இளம் ஊடகவியலாளர் சங்கம்

பேஸ்புக், யூடியுப், வட்ஸ்அப் உள்ளிட்ட சமூக ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் (01) நள்ளிரவு முதல் நாட்டில் தற்காலிக தடை விதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.



அரசாங்கத்தின் இத்தீர்மானத்தால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், இதுவொரு சாதாரண விடயமல்ல எனவும் ஆணைக்குழுவுக்கு அச்சங்கம் தெரிவித்துள்ளது.

தற்காலிக தடை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், இத்தடையால் நாட்டு மக்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும். இந்த முறைப்பாட்டில் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக குறிப்பிடப்பட்டு உள்ளவர்கள், தங்களது சொந்தப் பணத்தில் இருந்து நட்டஈட்டை செலுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தொழில்நுட்ப அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஐவர் இம்மனுவுக்குப் பதிலளிக்கக் கூடியவர்களாக பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒரே பார்வையில் பாகிஸ்தான் விவகாரம்

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிராகரிக்கப்பட்ட நிலையில், விரைவில் தேர்தல் நடைபெறும் என பிரதமர் இம்ரான் கான் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த சில ஆண்டுகளாகவே பொருளாதாரம் கடும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. கடுமையான கடன் சுமையால் சிக்கல் ஒருபுறம், பொருளாதார வீழ்ச்சி மறுபுறம் என இரட்டை சிக்கலை சந்தித்து வருகிறது. இதையடுத்து, அந்நாட்டு இராணுவத்துக்கும் ஒதுக்கீடு குறைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான்கான் அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளன. இந்தத் தீர்மானத்தின் மீது எதிர்வரும், 28 ஆம் திகதி வாக்கெடுப்பு நடக்கிறது. இம்ரான் கானுக்கு தற்போது சொந்த கட்சி எம்.பிகளே எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.



ராஜா ரியாஸ், நூர் ஆலம் கான் உள்ளிட்ட 22 எம்.பிக்கள் பிரதமர் இம்ரான் கான் மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டதாக குற்றம்சாட்டியுள்ளனர்.

பாகிஸ்தானில் மொத்தமுள்ள 342 எம்.பிக்களில், 172 பேரின் ஆதரவு தேவை. ஆனால், இம்ரான் கானின் ஆளும் தெஹ்ரிக் கட்சிக்கு 155 எம்.பிக்கள் உள்ளனர். ஆளும் கூட்டணிக்கு பிற கட்சிகளைச் சேர்ந்த 23 எம்.பிக்களின் ஆதரவு உள்ளது. இதில் 24 பேர் அரசாங்கம் மீது அதிருப்தியடைந்துள்ளனர். இவர்கள் அரசுக்கு எதிராக வாக்களித்தால் அரசு கவிழ்ந்துவிடும் ஆபத்து உள்ளது.

இந்தநிலையில் புதிய திருப்பமாக இராணுவத் தளபதி கமர் ஜாவேத் பஜ்வா உள்ளிட்ட நான்கு மூத்த பாகிஸ்தான் இராணுவ ஜெனரல்கள் பாகிஸ்தான் பிரதமரை இராஜினாமா செய்யுமாறு கூறியதாக உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்ரான் கான் சார்பாக இராணுவத்துடன் மத்தியஸ்தம் செய்ய முயற்சி நடைபெற்றது. ஆனால், அந்த முயற்சியும் தோல்வியடைந்தது. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையில் இம்ரான் கானின் ஆளும் பாகிஸ்தான் தெஹ்ரிக் இன்சாஃப் கட்சியின் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான முத்தாஹிதா குவாமி மூவ்மென்ட் பாகிஸ்தான் கட்சி தனது ஆதரவை வாபஸ் பெற்றது. இந்த பரபரப்பான சூழலில் இம்ரான் கான் அரசாங்கம் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் நேற்று (03) பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆனால், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் இம்ரான் கானுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. இம்ரான் கான் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கை வாக்கெடுப்பை துணை சபாநாயகர் நிராகரித்தார், இது அரசியலமைப்புக்கு எதிரானது என்று அவர் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து புதிதாக தேர்தல் நடைபெறும் என பிரதமர் இம்ரான் கான் அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறுகையில், “பாராளுமன்றத்தை கலைக்குமாறு ஜனாதிபதிக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தலுக்கு தயாராகுமாறு பாகிஸ்தான் மக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்” எனக் கூறினார்.

இதனிடையே நம்பிக்கை வாக்கெடுப்பை நிராகரித்த துணை சபாநாயகரின் முடிவை எதிர்த்து பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தை நாடப்போவதாக எதிர்க்கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன.

# நீர்கொழும்பிலும் எதிர்ப்பு

■ ஷாஜஹான்

ஊரடங்கு சட்டம் அமலில் இருந்தபோதிலும் நீர்கொழும்பில் பெரியமுல்லை பிரதேசத்தில் இரண்டு இடங்களில் அமைதியான முறையில் எதிர்ப்பு நடவடிக்கை நேற்று (03) மேற்கொள்ளப்பட்டது.

தனி நபர் ஒருவரும் குடும்பம் ஒன்றும் இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது. அதிகரித்து வரும் விலைவாசி, நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் என்பவற்றுக்கு எதிராகவும் ஜனாதிபதிக்கு எதிராகவும் தமது எதிர்ப்பை இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.




நீர்கொழும்பு, பெரியமுல்லை ரயில் கடவை அருகில் ஜூட் பெர்னாந்து என்ற நபரும் அதற்கு 300 மீற்றர் அண்மித்த பகுதியில் நீர்கொழும்பு - சிலாபம் வீதியில் பெரியமுல்லை பிரதேசத்தில் நான்கு பேரைக் கொண்ட குடும்ப அங்கத்தவர்கள் இணைந்து பதாகைகளை ஏந்தி, அமைதியான முறையில் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

# வீட்டுக்கு செல்வதைத் தவிர வேறு வழியில்லை

நாட்டை ஆட்சி செய்வதற்கான தகுதியை அரசாங்கம் இழந்துள்ளதாகத் தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய, ஆட்சியைவிட்டு வெளியேறுவதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறு வழியில்லை எனவும் தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டத்துக்கு மத்தியிலும் தேசிய மக்கள் சக்தியின் மஹரகமவில் நேற்று (03) ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், பொருளாதார நெருக்கடி நிலைமையை தாங்கிக்கொள்ளாத நாட்டு மக்கள் வீதிக்கு இறங்கி போராடுகின்றனர். இவர்களையே தற்போதைய அரசாங்கம் அடிப்படைவாதிகள் என்கிறது.

அடிப்படைவாதம் அரசாங்கத்திடமே இருக்கிறது; நாட்டு மக்களிடம் இல்லை. பிரச்சினைகள் இருப்பதாலேயே பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டு தாய்மார் போராட வருகிறார்கள். அரசாங்கம் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்று மக்கள் கூறுகிறார்கள். இனியும் நாட்டை ஆள்வதற்கு அரசாங்கத்துக்கு தகுதியில்லை எனவும் தெரிவித்தார்.



# “தமிழ் அரசியல்வாதிகள் சுயலாபத்துக்காக பதவிகளில்”

## சாணக்கியன் குற்றச்சாட்டு

இந்த அரசாங்கம் மக்களுக்கு செய்யும் மோசமான செயற்பாடுகளைக் கண்டு, ஆளுங்கட்சியில் உள்ள அமைச்சர்களே பதவியை துறந்து சென்றுள்ள நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் தமது சுயலாபங்களுக்காக பதவியை வைத்துக்கொண்டிருப்பது வேதனையான விடயம் என, கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இந்த நாட்டில் நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது, வேதனையாக இருக்கின்றது. நாடுமுழுவதும் வெடித்துள்ள போராட்டம் காரணமாக, ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப் பட்டுள்ளது.

இந்த நாடாளுமன்ற அமர்வு ஆரம்பித்த கடந்த ஒன்றரை வருடங்களாக, நாங்கள் இதனை தெரிவித்து வருகின்றோம். காயம் ஒன்று இருக்கும்போது, அந்தக் காயத்துக்கு மருந்திட்டு, அதைக் குணப்படுத்தாமல், அதை மறைத்து மறைத்து வைத்து, இன்று அந்தக் காயம் காரணமாக, காலை வெட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே இந்த ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டு உள்ளது.

எரிமலையைச் சூழ, பஞ்சு இருப்பதுபோன்றே மக்கள் இன்று உள்ளனர். எவர் போராட்டத்துக்கு அழைத்தாலும் தயார் நிலையிலேயே மக்கள் உள்ளனர். மக்கள் எதிர்நோக்கும் கஷ்டம் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் நிலைமை மிக மோசமாக சென்றுகொண்டி ருக்கின்றது.

நாங்கள் பொறுப்புள்ள அரசியல் கட்சியாக, இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கமுடியும் என்றே பார்க்கவேண்டும். ஜனாதிபதிக்கு இன்று இரண்டு வருடங்களுக்கு மேலாகவும் நாடாளுமன்றத்திற்கு மூன்று வருடங்களுக்கு மேலாகவும்



காலப்பகுதியுள்ள நிலையில், இந்த நிலைமை இவ்வாறு நீடிக்குமானால், மக்கள் வன்முறைகள் ஊடாகத் தமது ஆத்திரத்தை வெளிப்படுத்த முனையும்போது, அதை அடக்க அரசாங்கம் இராணுவத்தை பாவிக்கும் நிலையும் உருவாகலாம்.

இராணுவத்தின் குடும்பமும் இந்த நாட்டில் உள்ளது. அவர்களின் குடும்பத்திலும் இவ்வாறான பிரச்சினைகள் இருக்கும். இன்று அரசாங்கத்தின் மீது உள்ள அதிருப்தியைக்கொண்டு ஒரு சிலர் குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றனர். கலவரத்தின்போது, பாதுகாப்பு பிரிவினர் பார்த்துக்கொண்டிருக்கும் போதே பஸ் எரிக்கப்படுகின்றது.

திகனையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனக்கலவரத்தின் பின்னணியில் செயற்பட்டவர், போராட்டத்துக்கான அழைப்பை விடுத்துள்ளார். இவற்றினை சந்தேகத்துடனேயே பார்க்கவேண்டிய நிலையுள்ளது எனவும் தெரிவித்தார்.


LITRO GAS

முக்கிய அறிவித்தல்

அனைத்து லிற்றோ கேஸ் வாடிக்கையளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு இதன் மூலம் நிறுவனம் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால் நிறுவனம் புதிய தொகுதியை வெள்ளையில் பச்சை நிற நிறுவன முத்திரை பதித்த பொதியிடலை (shrink wrap) வீட்டுபாவனை எரிவாயு சிலிண்டர்களுக்கு (12.5Kg, 5kg மற்றும் 2.3Kg) 01ம் திகதி ஏப்ரல் மாதம் 2022 முதல் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அனுமதியுடன் பாவிக்க உள்ளது.

முன்னைய தொகுதி வீட்டுப்பாவனை எரிவாயு சிலிண்டர்கள் வெள்ளையில் சிவப்பு நிற நிறுவன முத்திரை பதிப்புடன் சந்தையில் உள்ளது.

பொருளாதார பிரச்சினையிலும்

# அமைதிக்கு நன்றி

■ வி.சுகிர்தகுமார்



பொருட்கள் தட்டுப்பாடு, மின்சாரம் துண்டிப்பு, நீரில்லாப் பிரச்சினை போன்ற துன்பங்களுக்கு மத்தியிலும் மக்கள் அமைதியாக உள்ளமையை, பெரிய விடயமாகப் பார்க்க வேண்டியுள்ளதாகவும் அதற்காக உங்கள் அனைவருக்கும் நன்றி கூறவேண்டும் எனவும் அக்கரைப்பற்று மாநகர சபை மேயர் அதாவுல்லா அஹமட் சகி தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் (02) மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், "ஒரு நிகழ்வுக்குச் சென்று, மக்களோடு மகிழ்ச்சியாக இருக்க முடியாத, பேசமுடியாத நிலை எல்லோருக்கும் தோன்றியுள்ளது. காலையில் எழுந்தால் பொருட்கள் கிடைக்குமா, என்ன பொருளுக்கு விலையேற்றப்பட்டுள்ளது எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

"நோன்பு ஆரம்பமான நிலையில், நாட்டில் எந்த மூலையில் என்ன நடைபெறப்போகின்றது என்ற அச்சத்தோடு காலத்தை கடத்த வேண்டியுள்ளது.

"குறைந்தது நீரையாவது அருந்தி வாழ்க்கையை கடந்தலாம் எனப் பார்த்தால், நீர் நிலைகளில் உள்ள இயந்திரத்தை இயக்கவும் பெற்றோல் தேவைப்படுவதாகக் கூறுகின்றார்கள். இதனால் நீரும் கிடைக்காது எனக் கூறுகின்றனர்" என்றார்.

# அனுமதியுடன் கோணேஸ்வரர் தேர்

■ பொன்ஆனந்தம்





திருகோணமலை அருள்மிகு திருக்கோணேசப் பெருமானின் மகோற்சவத்தின் தேர் உற்சவம், நேற்று (03) காலை 08 மணியளவில் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் நடைபெற்றது.

மாதுமையம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமான், மாதுமை அம்பாள், பிள்ளையார், முருகன் என தனித்தனியாக நான்கு தேர்களில் சுவாமிகள் வலம் வந்து, அடியார்களுக்கு அருள் பாலித்தனர்.

ஊரடங்குச்சட்டம் அமலில் இருந்த போதும், விசேட அனுமதியை கோவில் நிர்வாகம் பொலிஸாரிடம் பெற்றிருந்தது. இந்நிலையில், கோவிலுக்குரிய வாகனத்தில் நகரில் உள்ள பொதுமக்கள் ஏற்றி இறக்கப்பட்டனர்.

சுமார் 200இற்கும் அதிகமான பக்கத்தர்கள் இந்நிகழ்வில் பங்குகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத

# மதுபான விற்பனை; ஒருவர் கைது



■ கனகராசா சரவணன்

ஏறாவூர் குடியிருப்புப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்காக பட்டா ரக வாகனத்தில் மதுபானங்களை எடுத்துச் சென்ற ஒருவரை, நேற்று முன்தினம் (02) மாலை 6.30 மணியளவில் கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து, மட்டக்களப்பு பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ.எம்.எஸ். சந்திரகுமார தலைமையிலான பொலிஸ் குழுவினர், கோட்டமுனை பாலத்துக்கு அருகில் குறித்த பட்டா ரக வாகனத்தை சோதனையிட்டனர்.

இதன்போது கால்போத்தல் கொண்ட மதுபான போத்தல்கள் 250 மீட்கப்பட்டதுடன், பட்டா ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

# மூதாட்டி கொலை; சந்தேகநபர் கைது

■ நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்



அம்பாறை, சாய்ந்தமருதில் மூதாட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தலைமறைவாக இருந்த சந்தேகநபர், நேற்று (03) அதிகாலை கைது செய்யப்பட்டார்.

சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன் தலைமையிலான பொலிஸாரால் மட்டக்களப்பில் வைத்து சந்தேகநபரைக் கைது செய்தனர்.

கல்முனையை வசிப்பிடமாக கொண்டிருந்த 48 வயதுடைய இந்நபர், சாய்ந்தமருது, புதுப்பள்ளி வீதியிலுள்ள வீடொன்றில் தனித்து வசித்து வந்த 83 வயதுடைய சுலைமான் செய்யது புஹாரி என்னும் மூதாட்டியை கொலை செய்து விட்டு தலைமறைவாகியிருந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மூதாட்டியிடம் இருந்த நகைகளை அபகரிக்கும் நோக்கில் இந்தக் கொலை நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்ட நிலையில், தலைமறைவாகி இருந்த சந்தேகநபரை பல நாள்கள் தேடுதலின் பின்னர், சாய்ந்தமருது பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

மட்டக்களப்பு விடுதி ஒன்றில், குடும்பத்துடன் தங்கி வாழ்ந்த நிலையில், விடுதி பணியாளர்களாக நடித்தே பொலிஸ் குழுவினர் சந்தேகநபரை கைதுசெய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் சந்தை

■ அ.அச்சுதன்

திருகோணமலை அல் ஹிக்மா முன்பள்ளி மாணவர்களின் சிறுவர் சந்தை, அதிபர் நிஹாரா பதஹுல்லாஹ் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் (02) நடைபெற்றது.

இந்நிகழ்வின் விருந்தினர்களாக பிரதேச சபை, பட்டினமும் சூழலும் உப தவிசாளர் ஏ.எல் முஹமட் நௌபர், வெளிக்கள உத்தியோகத்தர் வி.ஷர்மிளா, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.அமுதியா, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆர். நிஷாந்தினி, இளைஞர் சேவை அதிகாரி ஏ.எல் அலாவுதீன் பாபு, கிராம சேவையாளர் ஏ.எஸ்.எம். ரூமி, பிரதி அதிபர் ஏ.ஜே.எம் சாலி, அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். தட்சானந்தி, விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எம்.எஸ் அஸாம் முஹமட், ஆசிரியர் ஆலோசகர் டபிள்யூ. ரபீதா ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.



பொருளாதார வளர்ச்சிக்கு

# பங்களிப்பு செய்யவும்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யுமாறு, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ், கல்வியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வியாபார நிர்வாகமாணி முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு கற்கை நெறி அங்குராப்பண வைபவத்தில் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய உபவேந்தர்,

"தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை தொடர்பவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக திகழ வேண்டும். அந்த வகையில், இக் கற்கை நெறியை பயில்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நீங்கள், இதன்மூலம் கூடிய வருமானத்தை பெறுவதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்ய முடியும்" என்றார்.

எரிபொருளுக்கு குவிந்ததால்

# ஊரடங்கில் அமைதியின்மை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்





கிளிநொச்சி நகரத்தின் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், டிப்பர் வாகன சாரதிகளுக்கு, நேற்று (03) காலை மண்ணெண்ணெய் வழங்கியதால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பங்கீட்டு அட்டைக்கான மண்ணெண்ணெயை வழங்காது, சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட டிப்பர் வாகன சாரதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டதுடன், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அத்தியாவசிய சேவைகளை ஒழுங்குபடுத்தும் வகையில் மாவட்டச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை(01) நடைபெற்ற கூட்டத்தில், உடனடித் தேவைகளுக்காக பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும், எரிபொருள் நிலையங்களில் அவ்வாறு வழங்காது, டிப்பர் வாகன சாரதிகளுக்கு பெரும் தொகையில் எரிபொருளை வழங்கி வருவதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தங்களுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற அதேவேளை, சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோருக்கு அதிகளவில் மண்ணெண்ணெய், டீசல் வழங்கப்படுவதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



## விளக்கின் ஒளியிலே

நாட்டில் தொடர்ச்சியாக மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவி ஒருவர், மண்ணெண்ணெய் விளக்கில் தனது கல்வி நடவடிக்கையைத் தொடர்கின்றார். (படம்: சண்முகம் தவசீலன்)

எரிபொருள் இன்மையால்

# தத்தளிக்கும் மீனவர்கள்

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, மாத்தளன் கடற்கரையில் இருந்து கடற்றொழிலுக்காக படகில் சென்ற இரு மீனவர்கள், எரிபொருள் தீர்ந்த நிலையில் நடுக்கடலில் தத்தளித்து, திருகோணமலை ஆழ்கடல் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளார்கள்.

வியாழக்கிழமை (30) புதுமாத்தளன் கடற்கரையில் இருந்து 30 லீற்றர் எண்ணெய்யுடன் கடற்றொழிலுக்கு சென்ற படகு, இலங்கையின் கடல் எல்லையை தாண்டிச் சென்று தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், இவர்கள் கொண்டு சென்ற எரிபொருள் தீர்ந்துள்ளதால் நடுக்கடலில் தத்தளித்துள்ளனர். 31 ஆம் திகதி கரை திரும்பவேண்டியவர்கள் மாலையாகியும் கரை திரும்பவில்லை. அவர்களின் தொடர்பும் இல்லாத நிலையில் மீனவர்களைக் காணவில்லை என, கடற்றொழில் திணைக்களம் மற்றும் ஏனைய மாவட்டக் கடற்தொழிலாளர்களுக்கு மாத்தளன் பகுதி, கடற்தொழிலாளர்களால் தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை (01) திகதி தத்தளித்த மீனவர்களை, திருகோணமலை ஆழ்கடல் மீன்பிடி மீனவர்கள் காப்பாற்றி கரைசேர்த்தனர். எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, பல கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

# வான் – ஓட்டோ விபத்து

## கனடா பிரஜை உட்பட இருவர் படுகாயம்





■ க.அகரன்

வவுனியா, ஏ9 வீதி, கொக்குவெளி இராணுவ முகாம் அருகே ஹயஸ் ரக வானும் ஓட்டோவும் நேற்று முன்தினம் (02) மோதி விபத்துக்குள்ளானதில், கனடா நாட்டு பிரஜை உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற வான், இராணுவ முகாம் அருகே ஒரு வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட போது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வான், எதிர்த்திசையில் வந்த ஓட்டோவுடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

இதன்போது, வவுனியா நகரிலிருந்து நொச்சிமோட்டை நோக்கிப் பயணித்த ஓட்டோ குடைசாய்ந்துள்ளது.

ஓட்டோவின் சாரதியான 43 வயதுடைய குடும்பஸ்தர் மற்றும் அதில் பயணித்த கனடா நாட்டுப் பிரஜையான 55 வயது நபர் ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஓட்டோ சாரதி, மேலதிக சிகிச்சைக்காக திடீர் அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்ததுடன், வான் சாரதியை கைது செய்தனர்.

கிளி. சிறுபோகத்துக்கு

# மொனராகலை உரம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக நெற்செய்கைக்குத் தேவையான சேதன உரம், மொனராகலை மாவட்டத்திலிருந்து 600 லொறிகளில் எடுத்து வரப்படவுள்ளதாக, மாவட்டச் செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபோக நெற்செய்கைக்கான முன்னேற்பாடுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், நிலப் பண்படுத்தலுக்கு தேவையான எரிபொருள் பெற்றுக்கொள்வதில் கால தாமத நிலை காணப்படுகின்றது.

இதனால் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# திடீர் ஊரடங்கு அறிவிப்பால் மக்கள் அசௌகரியம்

■ லெம்பர்ட்

நாடளாவிய ரீதியில் சனிக்கிழமை (02) மாலை 6 மணி தொடக்கம் இன்று (04) திங்கட்கிழமை காலை 6 மணி வரை திடீரென ஊரடங்கு அறிவிக்கப்பட்டது.

இதனால் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் எரிபொருட்களை பெற்றுக் கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் காணப்பட்டதோடு, பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகங்கொடுத்தனர்.

மன்னார் நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்களில் அதிகளவு மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட நிலையில், வழமை போன்று எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கும் மக்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

மாலை 6 மணியை கடந்த நிலையிலும் மன்னார் நகர் பகுதியில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் வழமை போன்று இயங்கி வந்த நிலையில், மின்தடை ஏற்பட்ட நிலையில் மக்களின் நடமாட்டம் அற்றுப்போனது.

உள்ளாடையை துவைக்க சொன்னதால்

# பொங்கி எழுந்த தோட்ட மக்கள்

நிலமேகம் பிரசாந்த்



செனன் தோட்ட முகாமையாளரின் மனைவினுடைய உள்ளாடையை துவைக்க மறுத்த தோட்ட தொழிலாளியை, கொச்சை வார்த்தைகளால் திட்டிய முகாமையாளருக்கு எதிராக, செனன் மக்கள் பணிப் பகிஸ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஹட்டன் பிளான்ட்டேஷன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் செனன் தோட்டத்தைச் சேர்ந்த தோட்டதொழிலாளர்களே நேற்று முன்தினம் (2) முகாமையாளருக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தோட்ட பங்களாவில் காவல் வேலை செய்யும் தொழிலாளியை, முகாமையாளர் தன் மனைவியினுடைய உள்ளாடையை துவைக்கச் சொன்னதாகவும் அதை மறுத்ததால் கொச்சை வார்த்தைகளால் திட்டியதாகவும் தொழிலாளி கூற, அதனால் ஒட்டு மொத்த செனன் தோட்டத் தொழிலாளர்களும் பணிப் பகிஸ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கையில், முகாமையாளரையும் அவரோடு தோட்டத்தில் வேலை செய்யும் இரு கணக்குபிள்ளைகளையும் இடமாற்றம் செய்ய வேண்டும். இம்மூவரும் தோட்டத்தொழிலாளர்களை அடிமை போல நடத்தி வருகின்றனர். தொழிற்சங்கங்களுக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளோம்.இதற்கு நிரந்த தீர்வு கிடைக்காவிட்டால், தொடர் பணிப்பகிஸ்கரிப்பை முன்னெடுக்க நேரிடும் எனக் குறிப்பிட்டனர்.

முன்பதிவுகளை இரத்துச் செய்யும்

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

பாலித ஆரியவன்ஸ



எரிபொருள் தட்டுபாடு மற்றும் மின்துண்டிப்பு காரணமாக, எல்ல சுற்றுலா வலயத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் பாரிய சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்துடன், நேற்று முன்தினம் (03) நாடளாவிய ரீதியில் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவாலும் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என எல்ல வர்த்தக சங்கத்தின் தலைவர் மலித்த சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெளிநாடுகளிலிருந்து முன்கூட்டியே பதிவு செய்த சுற்றுலாப் பயணிகள், தமது பதிவுகளை இரத்துச் செய்து வருவதாக ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சுற்றுலா விடுதிகளை மூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதால் தற்போது எல்ல பிரதேசத்தில் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகள், உணவுகளை பெற்றுக்கொள்வதிலும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

எல்ல பகுதியில் உள்ள ஹோட்டல்கள் உட்பட, நாட்டின் தற்போதைய நிலைமைகளை உடனடியாகச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்காவிட்டால், இலங்கையின் சுற்றுலாத்துறை முழுமையாக வீழ்ச்சியடையும் என அவர் எச்சரித்துள்ளார்.

## இருளில் பற்றி எரிந்த இரும்புக்கடை

மலைவாஞ்ஞன்



டிக்கோயா, புளியாவத்தை நகரில் இருளில் இரும்புக்கடையொன்று திடீரென தீப்பற்றிக் கொண்டதில், அக்கடைக்கு மேல் மாடியில் இருந்த குடியிருப்பு முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

முதலாம் திகதி இரவு சுமார் 8.30 மணியளவில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டதுடன், இதன்போது அப்பகுதியில் மின் துண்டிக்கப்பட்டு இருந்ததாகவும் இதனால் அந்தக் குடியிருப்பு பகுதியிலிருந்த அனைத்து உடைமைகளும் தீயில் எரிந்துள்ளதாக உரிமையாளர் தெரிவித்தார்.

கடை தீப்பற்றிக்கொண்ட போது, வீட்டில் உள்ளவர்கள், கடையின் மேல்மாடியில் இருந்துள்ள போதிலும் தெய்வாதீனமாக எவருக்கும் எவ்வித காயமும் இன்றி காப்பாற்றப்பட்டுள்ளனர்.

நிர்க்கதியான யாத்திரிகர்கள்

## பத்திரமாக அனுப்பப்பட்டனர்

ரஞ்சித் ராஜபக்ஷ, மலைவாஞ்ஞன்





திடீரென நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவால் நிர்க்கதிக்குள்ளான சிவனொளிபாதமலை யாத்திரிகர்களை, அவர்களது சொந்த இடங்களுக்கு பத்திரமாக அனுப்பும் நடவடிக்கையை ஹட்டன், நல்லத்தண்ணி பொலிஸார் முன்னெடுத்தனர்.

மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விஜித அல்விஸ் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ், குறித்த யாத்திரிகர்களை சொந்த இடங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் (02) சிவனொளிபாதமலை யாத்திரையை முடித்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சுமார் 29 பேர், பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

குறித்த யாத்திரியர்கள் நேற்றுமுன்தினம் (2) மாலை 4.00 மணிக்கு மலையிலிருந்து இறங்கியதாகவும் அதனை தொடர்ந்து ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால், பயணிப்பதற்கு பொதுப் போக்குவரத்து இல்லாததன் காரணமாக, ஹட்டன் ரயில் நிலைய ஓய்வு விடுதியில் தங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கடைகள் மூடப்பட்டுள்ளதால் இரவு, காலை உணவின்றி இருந்தாகவும் அதனை தொடர்ந்து ரயில் நிலைய பணியாளர்கள் நேற்று (03) பகல் உணவை வழங்கியதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன், ரயில் நிலைய சிற்றூண்டிசாலையையும் இவர்களின் நலன் கருதி திறந்து வைத்துள்ளதாகவும் குறித்த 29 பேரும் பாணந்துறை, கொழும்பு, கம்பஹா, மாத்தறை உள்ளிட்ட வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ரயில் நிலை பணியாளர் ஒருவர் தெரிவித்திருந்த நிலையில், நேற்று (3) அவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்ப பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

ஓட்டோ மீது மரக்கிளை முறிந்து விழுந்து

## இருவர் உயிரிழந்தனர்

என். ஆராச்சி

புளத்கொஹூபிட்டிய-தேதுகல வீதியின் வெலிவங்குவ பிரதேசத்தில் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ மீது, மரக்கிளை முறிந்து விழுந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (02) மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் உயிரிழந்த இருவரும் 79 மற்றும் 55 வயதுடையவர்கள் என புளத்கொஹூபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, குறித்த ஓட்டோவில் நால்வர் பயணித்துள்ளதுடன் இருவரே படுகாயமடைந்து கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



## கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன...




INTERNATIONAL LIONS CLUB OF COLOMBO BEACON CITY DISTRICT 306 B2 கிளை அங்கத்தவர்களால், பன்விலை, நெல்லிமலை க/வத்/ சிவனேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில், தரம் ஒன்றுக்கான புதிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அதிபர் மருதமுத்து நவநீதன் தலைமையில் நடைபெற்றது. இதில் லயன் நடேசன் நவசீலன் உபகரணங்களை வழங்கிவைப்பதையும் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம் (படங்கள்: மெய்யன்)

நாட்டை முடக்கி மக்களுடைய ஜனநாயக

## உரிமையை அரசாங்கம் பறித்துள்ளது

### வடிவேல் சுரேஸ் எம்.பி சீற்றம்



நாட்டை முடக்கி மக்களுடைய ஜனநாயக உரிமைகளை அரசாங்கம் பறித்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று (3) ஐக்கிய மக்கள் சக்தியால் சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

நாடு பாரியதொரு பின்னடைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. எங்கும் எதிலும் தட்டுப்பாடு; மக்கள் பொறுமை இழந்து வீதிக்கு இறங்கி இருக்கின்றார்கள்.

இத்தகையதொரு சூழ்நிலையில், ஒட்டுமொத்த நாட்டு மக்களுடைய கருத்துச் சுதந்திரத்தை, நாட்டை முடக்கி இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம், நாட்டில் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்துவதற்கு இது யுத்த காலம் அல்ல; இது பஞ்ச காலம்.

நாட்டை ஆட்சி செய்யும் ஒரு சிலர் சுயநலவாத தலைமைகள். அவர்களுடைய தேவைக்கு ஏற்றாற்போல் திடீரென்று நாட்டை முடக்கி, மக்களை மீண்டும் மீண்டும் சிரமத்துக்கு உட்படுத்தி இருக்கின்றார்கள்.

'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பதுபோல், இன்று ஒட்டுமொத்த இலங்கை வாழ் மக்களும் சர்வாதிகார ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். சமூக வலைத்தளங்களை முடக்குவதாலும் நாட்டை முடக்குவதாலும் மக்கள் மனதை முடக்க முடியாது. மக்கள் தீர்மானித்து விட்டார்கள்; வீடு செல்லத் தயாராக இருங்கள் எனக் கருத்துத் தெரிவித்தார்.




முன்பள்ளி ஆசிரியர்களுக்கு

## தமிழ்மொழி பயிற்சி செயலமர்வு

சுமணசிறி குணதிலக

புத்தல பிரதேச செயலகத்தின் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவு மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான தமிழ் மொழி பயிற்சி, அண்மையில் புத்தல பிரதேசசெயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த செயலமர்வில் 42 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டதுடன் இவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.

புத்தல உதவி பிரதேச செயலாளர் சுமுது சுதுசிங்க தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றதுடன், இதில் பிரதேச செயலக அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஒத்திவைக்கப்பட்ட போராட்டம்

## 10ஆம் திகதி நடக்கும்

### திகா எம்.பி தெரிவிப்பு

எஸ்.கணேசன்



" மக்கள் எழுச்சிக்கு அஞ்சி அரசாங்கம் ஊரடங்கு உத்தரவை பிறப்பித்துள்ளதால் தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் தலவாக்கலையில் இன்று (நேற்று 03) நடைபெறவிருந்த போராட்டம் பிற்போடப்பட்டது. அந்தப் போராட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி முன்னெடுக்கப்படும்" என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தலவாக்கலை கதிரேசன் கோவில் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (02) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

"நாட்டில் பொருட்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன. அத்தியாவசியப் பொருட்களுக்குகூட கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. சமையல் எரிவாயு, எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மக்களுக்கு வரிசையில் காத்துகிடக்க வேண்டியுள்ளது. இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நாட்டை ஆளக்கூடியவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறும் வலியுறுத்தி தலவாக்கலையில் போராட்டம் முன்னெடுக்கப்பட இருந்தது. இதில் 20 ஆயிரம் பேர் பங்கேற்க இருந்தனர். அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

எனினும், மக்கள் எழுச்சிக்கு அஞ்சி, போராட்டங்களை தடுக்கும் நோக்கில், அரசாங்கம் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளது. எனவே, இடம்பெறவிருந்த போராட்டம், அடுத்த ஞாயிற்றுக்கிழமை 10 ஆம் திகதிவரை பிற்போடப்படுகின்றது. அன்றைய தினம் உணர்வுபூர்வமாகப் பங்கேற்குமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆட்சிக்கு வந்த பிறகு நெருக்கடிகள் தலைவிரித்தாடுகின்றன. 13 மணிநேரம் மின்வெட்டு அமல்படுத்தப்படுகின்றது. இந்நிலைமை நீடித்தால் தேயிலை தோட்டங்களையும் மூடவேண்டிவரலாம். எனவே, இந்த ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை விரட்ட வேண்டும். புதிய ஆட்சியை உருவாக்க வேண்டும்" என்றார்.

இரத்தினக்கல் வருமானத்தில்

## தமக்கான பங்கு கிடைக்கவில்லை என எதிர்ப்பு

சுதத்.எச்.எம்.ஹேவா

வட்டவளை, மவுண்ட்ஜின் தோட்டப் பகுதியில் முன்னெடுத்துச் செல்லப்படும் இரத்தினக்கல் அகழ்வில் கிடைக்கும் பணத்தில், 10 சதவீத நிதி உரிய முறையில் சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று (3) வட்டவளை நகரில் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த இரத்தினக்கல் அகழ்வின் போது கிடைக்கும் வருமானத்தில் 10 சதவீதம், அப்பிரதேசத்திலுள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது.

எனினும் அவ்வாறு வாக்குறுதி அளிக்கப்பட்ட பணம், உரியமுறையில் தமக்கு கிடைக்கவில்லை என தெரிவித்து, சமுர்த்தி பயனாளிகளால் இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# முட்டாள்தனமான தீர்மானங்கள் பேராபத்துக்கு வழிசமைக்கும்

தீர்மானங்களை எடுக்கும் போது, பின்விளைவுகளைப் பற்றியும் சிந்தித்தே ஆகவேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், குறுகிய, அன்றேல் நீண்டகாலத்துக்குப் பின்னர், தங்களுக்கே எதிர்விளைவுகளை விளைவித்துவிடுமா என்பது குறித்து, ஆராய்ந்தே தீர்மானங்களை எடுக்கவேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியில், எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பல, 'சுவரில் எறிந்த பந்தைப் போல்' இருந்தன. திரும்பத் திரும்ப திருத்தப்பட்டன.

இந்நிலையில், மிரிஹானையில் ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு முன்பாக, வியாழக்கிழமை (31) நடத்தப்பட்ட போராட்டத்துக்குப் பின்னர், ஊரடங்குச் சட்டம் அமலானது.

நாடளாவிய ரீதியில், நேற்று (03) எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்த, சமூக வலைத்தளங்களின் ஊடாக, அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், அவசரகாலச் சட்டமும் ஊரடங்குச் சட்டமும் அமல்படுத்தப்பட்டதால், சட்டங்களுக்கு தலைவணங்கியவர்கள், போராட்டத்தை வேறு தளங்களுக்குக் கொண்டு சென்றனர்.

அரசாங்கத்தின் முட்டாள்தனமான தீர்மானம், 'ஒவ்வொருநாளும் போராட்டம் நடத்துவோம்' என்ற சிந்தனையை விதைத்துவிட்டது. அதுமட்டுமன்றி, போராட்டங்களின் தன்மை, மாறிவிட்டது. பலர் தங்களுடைய வீடுகளுக்கு முன்பாக, பதாகைகளுடன் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

விலையேற்றத்தை கண்டித்தும், அடிப்படைத் தேவைகளுக்காகவும் மக்கள் வீதியில் இறங்கிவிட்டனர். தனது ஆட்சிக்கு எதிராக எழுந்திருக்கும் மக்களின் எதிர்ப்பை, இரும்புக்கரம் கொண்டு அடக்க, அடக்குமுறைச் சட்டங்களை அரசாங்கம் திணித்திருக்கிறது. இது கோழைத்தனமானது; மக்கள் விரோத அடக்குமுறையாகும். வெள்ளிக்கிழமை (01) அமல்படுத்தப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பு அவசரகாலச் சட்டம், 14 நாள்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அதற்கு முன்னர், பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற வேண்டும். ஆட்சிக்குள் நிலவும் உள்வீட்டு முரண்பாட்டுக்கு மத்தியில், இச்சட்டத்தை நீடித்துக்கொள்வது பற்றி, இரண்டொரு தடவைகள் சிந்திக்கவேண்டும்.

இராஜினாமா செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. அரசாங்கத்துக்கான ஆதரவை விலக்கிக்கொள்வதாக, பல கட்சிகள் அறிவித்துள்ளன. இந்நிலையில், பாராளுமன்றம் கூடுமாயின், அரசாங்கத்தின் பெரும்பான்மை, சில வேளைகளில் கேள்விக்குட்படுத்தப்படலாம். இது, அரசாங்கத்தின் இருப்புக்கு சிக்கலாகும்.

இதற்கிடையே, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பலர், பல்வேறான சுலோகங்களை ஏந்தியிருந்தனர். அதிலொன்றில், 'முதலில் அவர்கள், தமிழர்களைக் குறிவைத்தார்கள்; அப்போது நான் குரல் கொடுக்கவில்லை. ஏனென்றால், நான் தமிழர் இல்லை. இஸ்லாமியர்களை குறிவைத்தார்கள்; அப்போதும் நான் குரல் கொடுக்கவில்லை. ஏனென்றால் நான் இஸ்லாமியர் இல்லை' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. இது எதிர்கால சந்ததியினரை தவறாக வழிநடத்தும்.

எவ்விதமான வேறுபாடுகளும் இன்றி, சகல இன மக்களும் ஒரு குடையின் கீழ், அடிப்படைத் தேவைகளுக்காக போராட்டங்களை நடத்தும்போது, வாசகங்களை கவனமாக கையாளவேண்டும். அதேபோல, அடக்கியாள நினைக்கின்றோம் எனும் சிந்தனையில் முட்டாள்தனமான தீர்மானங்களை எடுப்பதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# வீழ்ச்சியின் விளிம்பில் ராஜபக்ஷர்கள்



என்.கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, கோட்டா ஆதரவாளர்களிடமிருந்து, "இந்நாட்டுக்கு ஹிட்லரைப் போன்ற ஒரு தலைவர் வேண்டும்; அது, கோட்டா தான்" என்ற தொனியிலான முழக்கங்களை இந்நாடு கேட்டது.

'எதற்கும் துணிந்தவன்; எல்லாம் வல்லவன்' என்ற பிம்பம் கோட்டாவைப் பற்றி பெருப்பித்துக் கட்டப்பட்டது. இதன் பின்னணியில், இலங்கையில் சர்ச்சையான முறையில் பணம் சம்பாதித்திருந்த வணிகர்கள் பலரும், தம்மை நாட்டை நேசிக்கும் தொழில் நிபுணர்களாகக் காட்டிக்கொண்ட ஒரு கூட்டமும் பௌத்த மதத் தலைவர்களைக் கொண்ட ஒரு குழாமும் இருந்தது.

'சிங்கள - பௌத்தம்' என்ற பேரினவாத நிகழ்ச்சி நிரல் முன்னிறுத்தப்பட்டது. 'சிங்கள - பௌத்த' வெற்றி நாயகனாக கோட்டா, 6.9 மில்லியன் மக்களால் வாக்களிக்கப்பட்டு ஜனாதிபதியானார்.

இரண்டரை வருடங்களில், 'எல்லாம் வல்லவன்' என்ற பிம்பம், புஸ்வாணமாகிப் போனது. இலங்கையின் பொருளாதாரம் சரிந்து, விழுந்து, உடைந்து இன்று அதளபாதாளத்தில் நொறுங்கிக் கிடக்கிறது.

இதன் விளைவாக, நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு, மின்சாரத் துண்டிப்பு, உணவுத் தட்டுப்பாடு, பால் மற்றும் பால்மா தட்டுப்பாடு, மருந்துகள் தட்டுப்பாடு என அத்தனை அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ரூபாயின் பெறுமதி, 'கடுகதி'யில் சரிந்ததால், பொருட்கள் 'சடசட'வென விலையேறின. அன்றாடம் உழைக்கும் தொழிலாளி, இந்தச் சுமையை எப்படித் தாங்குவான்?

ஒரு நாளில் 13 மணி நேர மின்வெட்டு என்பது, தென்னிலங்கை கடந்த சில தசாப்தங்களில் கண்டிராத இருண்டநிலை. வடக்கு - கிழக்குக்கு இது புதிதல்ல. யுத்தகாலம் முழுவதும் இருளில் வாழ்ந்து, பிழைத்து நிற்கும் மக்கள், வடக்கு-கிழக்கு மக்கள். ஆனால், ஒரு நாளில் 13 மணி நேரம் வரை மின்வெட்டினால் கதிகலங்கிய மக்கள், வீதிக்கு இறங்கிவிட்டார்கள்.

வியாழக்கிழமை (31) இரவு, கோட்டாவின் மிரிஹான வீட்டுக்கு அருகில் கூடிய மக்கள் செய்த ஆர்ப்பாட்டம், ராஜபக்ஷர்களை ஆட்டம் காணச்செய்துவிட்டது.

இது, அரசியல் கட்சிகள் வீதிக்கு இறங்கிச் செய்த ஆர்ப்பாட்டமல்ல. அரசியல் கட்சிகள் பணமும் சாராயமும் கொடுத்து, பஸ்களில் மக்களை ஏற்றிவந்து செய்யும் ஆர்ப்பாட்டங்களை, கோட்டாவோ ராஜபக்ஷர்களோ பெரிதாக கண்டுகொள்ளவில்லை.

ஆனால், மக்கள் தாமாகப் போராடத் தொடங்கியது, ராஜபக்ஷர்களை கதிகலங்க வைத்துவிட்டது. "கோட்டா கோ ஹோம்" ("கோட்டா, வீட்டுக்குப் போ") என்பதுதான் இன்று, இலங்கை எங்கும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

கதிகலங்கிப்போனவர்கள், 'நாறிய அரசியல் சித்து விளையாட்டு'ப் புத்தகத்தின் எல்லா விளையாட்டுகளையும் விளையாட முயற்சிக்கத் தொடங்கினார்கள். மக்கள் அமைதியான முறையில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், திடீரென 'ரௌடி'கள் நுழைகிறார்கள்.

ஒருவன் பஸ்ஸுக்குத் தீமூட்டும் காட்சி, சமூக ஊடகங்களில் தெளிவாகப் பதிவாகிறது. இதைக் காரணம் காட்டி, பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல், நீர்பீய்ச்சல் தாக்குதல் என்பவற்றை, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் மீது நடத்துகிறார்கள். அதன் பின்னர் பலபேரைக் கைது செய்கிறார்கள்.

கொஞ்சப் பேரைக் கைது செய்து, மறியலில் வைத்து விட்டால், அந்தப் பயத்தில் மக்கள் வீதிக்கு இறங்க மாட்டார்கள் என்ற அரசியல் கணக்கு பிழைத்தது. அது, இந்நாட்டின் சட்டத்தரணிகளின் நடவடிக்கையால் என்றால் மிகையல்ல!

ஏறத்தாழ 500 சட்டத்தரணிகள், 'வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில்' கைது செய்யப்பட்டவர்களுக்காக பொலிஸ் நிலையத்திலும், அதன் பின்னர் நீதிமன்றத்திலும் ஆஜராகி இருந்தார்கள். குறிப்பாக, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் இந்நாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸ உள்ளிட்ட பல ஜனாதிபதி சட்டத்தரணிகள் கூட அன்று ஆஜராகியிருந்தார்கள்.

இரவு 10.30 மணி வரை நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர், கைது செய்யப்பட்ட பலரும், நீதவானால் பிணையில் விடுதலை செய்யப்பட்டு இருந்தார்கள். இது ராஜபக்ஷர்கள் எதிர்பார்க்காத திருப்பம்.

இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை, (ஏப்ரல் மூன்றாம்) பெரும் ஆர்ப்பாட்டத்துக்கான அழைப்பு சமூக ஊடகங்களில் பரவிக்கொண்டிருந்தது. அச்சத்தின் உச்சத்திலிருந்த கோட்டா, முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கத் தொடங்கினார். உடனடியாக அவசரகாலநிலையை பிரகடனம் செய்தார்.

இரண்டு வருடங்கள் இந்நாட்டை ஆட்டிப்படைத்த கொவிட்-19 பெருந்தொற்றின் போது பிரகடனம் செய்யாத அவசரகால நிலையை, இந்நாட்டின் பொருளாதாரம் அதளபாதளத்தில் விழுந்த போது பிரகடனம் செய்யாத அவசரகால நிலையை, அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்த போது பிரகடனம் செய்யாத அவசரகால நிலையை, மக்கள் தாமாக வீதிக்கிறங்கி போது பிரகடனம் செய்துள்ளார்.

காரணம், பயம்! மக்கள் பலத்தின் மீதான பயம்!

அத்தோடு நிற்கவில்லை; மூன்றாம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெற்று விடுமோ என்ற அச்சத்தில், (சனிக்கிழமை மாலை ஆறு மணி தொடக்கம் திங்கட்கிழமை காலை ஆறு மணிவரை) 36 மணி நேர ஊரடங்கை அமல்படுத்தியதுடன், பூங்கா, கடற்கரை என எந்தப் பொது இடத்திலும் மக்கள் ஒன்றுகூட முடியாது என்ற உத்தரவையும் போட்டார் கோட்டாபய ராஜபக்ஷ!

'எதற்கும் துணிந்தவன்; எல்லாம் வல்லவன்' என்ற வீரனின் தைரியத்தின் அளவு அவ்வளவுதான். தனக்கு வாக்களித்த மக்களையே கண்டு பயப்படும் 'பெரு வீரன்'!

சரி! அதோடு நின்றதா அராஜகம்? இல்லை! ஞாயிற்றுக்கிழமை (03) அதிகாலை முதல் சமூக ஊடகங்களை அணுக முடியாத நிலைமை இலங்கையர்களுக்கு ஏற்பட்டது. அதன் பின்னர்தான், சமூக ஊடங்களைத் தடை செய்யுமாறு, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு உத்தரவு பிறப்பித்திருப்பதாக தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் அறிவித்தார்கள்.

மக்களின் கருத்துப்பகிரலுக்கே பயப்படும் இந்தப் 'பயந்தாங்கொள்ளி'க் கூட்டத்தையா வீரர்கள் என்று விளித்தார்கள் என்ற நகைப்பு ஏற்பட்டாலும், மக்களின் கருத்துச் சுதந்திரத்தையும் நடமாடும் சுதந்திரத்தையும் தொழிற்சுதந்திரத்தையும் நசுக்கும் இந்த ஜனநாயக விரோத செயல்களைக் கண்டு, ஒவ்வோர் இலங்கையரது உள்ளமும் கொதிக்கிறது.

எந்த மக்கள், இந்த ராஜபக்ஷ கூட்டத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்தார்களோ, இன்று அதே மக்கள், இந்த ராஜபக்ஷ கூட்டத்துக்கு எதிராகத் திரும்பி இருக்கிறார்கள். இது போன்ற நிலைமை, தமக்கு எதிராக உருவாகும் என்று, ராஜபக்ஷர்கள் கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்கள்.

ஏனென்றால், அவ்வளவு தூரம் சிந்திக்கும் திறன் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், பௌத்தம் இதனை 'தித்த தம்ம வேதனிய கம்ம' என்கிறது. அதாவது, 'இந்த ஜென்மத்திலேயே பலனை அனுபவிக்கும் கர்மா' என்கிறது.

இனவாத வெறியை விதைத்து, சிறுபான்மையினரை அடக்கியொடுக்கி, பேரினவாதத்தை பரப்பிய ராஜபக்ஷர்களுக்கு எதிராக, இன்று அவர்களது ஆதரவாளர்களே திரும்பியிருக்கிறார்கள்.

'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' என்று, நல்வழியில் பட்டியலிட்டாள் ஔவைப் பிராட்டி.

'பசி வந்தால் இனவாதமும் கூட மறந்துபோகும்' என்ற இந்த நிலையிலும் கூட, இனவாதம் தம்மை காக்கும் என்ற ரீதியில், தீவிரவாதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்று கதைபரப்ப முயன்ற அரசாங்கத்தினர் மூக்குடைபட்டனர்.

ராஜபக்ஷர்களின் பிரம்மாஸ்திரமான 'இனவாதம்' கூட, பயன்தராத நிலைதான் தற்போது நிலவுகிறது. அதனால்தான் முழுமையான அடக்குமுறையை ராஜபக்ஷர்கள் கையிலெடுக்கத் தொடங்கிவிட்டார்கள். இதற்கு எதிராக,, அரசாங்கத்துக்கு உள்ளிருந்தே குரல்கள் எழத் தொடங்கிவிட்டன.

நாமல் ராஜபக்ஷ கூட, சமூக ஊடகங்கள் மீதான தடையை எதிர்த்து, சமூக ஊடகத்திலேயே கருத்து வெளியிட்டிருந்தார். பாவம், நாமலுக்கு தன்னுடைய அரசியல் எதிர்காலம் பற்றிய அச்சம் வந்திருக்கும்தானே! அதனால் தன்னை, தன்னுடைய அப்பா, சித்தப்பாக்களிடம் இருந்து, தனியாகப் பிரித்துக்காட்ட விளைகிறார்.

அது நடக்காது!

இந்நாட்டு மக்கள், ராஜபக்ஷர்களுக்கு மீண்டும் மீண்டும் வாக்களிக்கும் அளவுக்கு முட்டாள்களாக இருக்கலாம். ஆனால், நாமல் ராஜபக்ஷ, மற்றைய ராஜபக்ஷர்களில் இருந்து வேறுபட்டவர் என்று நம்பும் அளவுக்கு முட்டாள்கள் அல்ல என்றே நம்புகிறேன்.

இன்று வீழ்ச்சியின் விளிம்பில் ராஜபக்ஷர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். 'என்ன வீழ்ச்சியின் விளிம்பிலா, ராஜபக்ஷர்கள் விழுந்துவிட்டார்களே' என்று பலரும் கேட்கலாம்.

இல்லை! ராஜபக்ஷர்கள் என்பவர்கள் கரப்பான்பூச்சிகளின் தன்மையைப் போன்றவர்கள். அவர்களை இல்லாதொழிப்பது கடினம். இனவாதம், காழ்ப்புணர்வு, இனவெறி என்ற அழுக்குத்தான் அவர்கள் வாழும் வளரும் இடம். அந்த அழுக்கு இருக்கும் வரை, ராஜபக்ஷர்கள் மீண்டும் மீண்டும் வந்துகொண்டேதான் இருப்பார்கள்.

ஆகவே, ராஜபக்ஷர்கள் அரசியலிலிருந்து இல்லாதொழிக்கப்பட வேண்டுமானால், இனவாதம், காழ்ப்புணர்வு, இனவெறி என்ற அழுக்கு இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

சுத்தமான இடமாக அரசியல் மாற்றப்பட்டால், அங்கு கரப்பான்பூச்சிகளால் பிழைத்து, நீடித்திருக்க முடியாது. அது நடக்கும் வரை, கரப்பான்பூச்சிகளுக்கு முடிவே கிடையாது. அவர்கள் விழுந்தாலும், அழுக்கிலே உழன்று, பிழைத்து மீண்டும் மீண்டும் வந்துகொண்டே இருப்பார்கள். முதலில் அழுக்கை சுத்தம் செய்யுங்கள்!



## வாழ்வியல் தரிசனம

பிறப்பு, இறப்பு நிதர்சனமானவை. ஜனனம் நடைபெறாது விட்டால், உலகில் உயிர்களே இல்லை. ஆனால், இறப்பு எல்லோருக்குமானது என்பதையும் அதன் தாற்பரியத்தையும் இன்னமும் மாந்தர்கள் புரிவதாக இல்லை.

இறப்பைப் பற்றிய புரிதல் இருந்தால், உலகில் மனிதர்கள் கண்டபடியெல்லாம் நடந்துகொள்ள மாட்டார்கள். ஆசை தலைக்கேறி அலையமாட்டார்கள். அரசியல்வாதிகள் முறைகேடாக நடக்கமாட்டார்கள். யுத்தங்களை நடத்த விரும்பமாட்டார்கள். இனம், மதம், மொழி, சாதி போன்ற பேதங்களுடன் வாழ மாட்டார்கள்.

உபதேசங்களைக் கேட்கும் அனைவரும் திருந்துவதாக இல்லை. ஆனால், அரிய பிரசங்கங்களை, ஆன்மிக உரைகளை விடியவிடியக் கேட்டபடி இருப்பார்கள். ஆனால், அவற்றில் உரைக்கப்படும், வாழ்க்கையில் அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகளை உதாசீனம் செய்து, தான்தோன்றித் தனமான வாழ்வார்கள். எதையும் தானம் செய்யாமல், விட்டுக்கொடுக்காமல், சுயநலவாதிகளாய், பொறாமைக் கண்களுடன் இரக்க சுபாவமின்றி வாழ்வார்கள்.

நித்தியமற்ற வாழ்வு மரணத்தில் முடிகின்றது. எனினும் மரணம் என்பதே, எமக்கு இல்லை என்பதுபோல் வாழ்கின்றார்கள். மனிதன் மரணிக்கும்போது, எதையும் கொண்டுசெல்வதில்லை. மரணப் படுக்கையிலும் ஆணவத்துடன் சபதம் செய்பவர்களும் இருக்கிறார்கள்.

இறந்த பின்னர், எதைத்தான் உணர்வது, தெரிந்துகொள்வது? அறவாழ்வில் புகுந்துகொண்டால், நிம்மதி எதுவெனப் புரியும். அறியாமையுடன் வாழக்கூடாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மணல் அகழ்வு; பொலிஸார் முழு ஒத்துழைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில், இரவு நேரங்களில் அதிகளவான மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் நான்கு சந்திகளிலும் இராணுவ சோதனை சாவடிகள் உள்ளபோதும் நகர்ப்பகுதி ஊடாக உழவு இயந்திரத்தில் மணல் கொண்டு செல்லப்படுகிறது. இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் பொலிஸாரால் மேற்கொள்ளவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


புதுக்குடியிருப்பு நகர் பகுதியிலேயே இவ்வாறு மணலகழ்வு இடம்பெறுவதை அறிந்தும் இராணுவமோ பொலிஸாரோ இவர்களை கைது செய்யாமையானது, இவர்களின் உடந்தையுடனேயே இந்தச் சட்டவிரோத செயல்கள் இடம்பெறுகின்றன என்பதை சுட்டி நிற்கிறது.

இவ்வாறு, இரவு நேரத்தில் சட்டவிரோத மணல் கடத்தல் இடம்பெற்றபோது, புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கிய போதும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகைதந்தும் அவர்களை கைது செய்யாத சம்பவம் குறிப்பிடத்தக்கது.

–சண்முகம் தவசீலன்

AIA காப்புறுதியை வைத்திருப்பவர்களுக்கு

# கொமர்ஷலின் இரண்டு தெரிவுகள்




AIA காப்புறுதியை வைத்திருப்பவர்கள் அது சம்பந்தமான சந்தா கொடுப்பனவுகளை கொமர்ஷல் வங்கியூடாக செலுத்த மேலும் இரண்டு தெரிவுகளை வங்கி அறிமுகம் செய்துள்ளது. AIA காப்புறுதிக்கான கொடுப்பனவுகள் வங்கியின் Q+ செயலி உடன் தொடர்புபடுத்தப்பட்டு உள்ளதோடு நாடு முழுவதும் உள்ள வங்கியின் பண மீள்சுழற்சி இயந்திரங்களும் (Cash Recycler Machines (CRMs) இந்தக் கொடுப்பனவு முறையோடு இணைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் எந்த நேரத்திலும் வருடத்தின் எந்த தினத்திலும் கொடுப்பனவுகளை செய்ய முடியும் என வங்கி அறிவித்துள்ளது. இந்தக் கொடுப்பனவுகள் உடனுக்குடன் அங்கிகரிக்கப்படுவதோடு தரவேற்றமும் செய்யப்படும்.

இன்றைய தொற்றுப் பரவும் சூழலில் பௌதிக ரீதியான தொடுகைகள் ஆபத்தை உருவாக்கலாம் எனக் கருதப்படுவதால் தமது பாதுகாப்பிலும் வசதியிலும் வாடிக்கையாளர்கள் செலுத்தும் கவனமும் அதிகரித்து வந்துள்ளது. அதனால் வங்கி தனது டிஜிட்டல் மயக் கொடுப்பனவு முறைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றது.

AIA காப்புறுதித் திட்டங்களை வைத்திருப்பவர்கள் தமது திறன்பேசிகளில் Q+ கொடுப்பனவு செயலியை தரவிறக்கம் செய்து அதனூடாக தமது கொடுப்பனவுகளையும் செலுத்த முடியும். APP store அல்லது Google play store வழியாக இந்தச் செயலிகளை தரவிறக்கம் செய்து வாடிக்கையாளர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். காப்புறுதி சந்தா கொடுப்பனவுகளை செலுத்த காப்புறுதிதாரர்கள் கொமர்ஷல் வங்கியின் டெபிட் அல்லது கிரடிட் கார்ட் அல்லது முன் கூட்டி கொடுப்பனவு செலுத்திய கார்ட்டுகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு வழமையான நடைமுறைகளைப் பின்பற்றி AIA Insurance என்ற சேவை வழங்குநர் பிரிவுக்குள் சென்று உரிய விவரங்களை வழங்கி தமது கொடுப்பனவைச் செலுத்தலாம். இதில் உள்ள Favourite பகுதிக்குள் சென்று காப்புறுதி சந்தா தொடர்பான விவரங்களை சேமித்து வைத்துக் கொள்வதன் மூலம் ஒவ்வொரு முறையும் அதை பதிவு செய்ய வேண்டும் என்ற தேவை இல்லை. பட்டியல் கொடுப்பனவுகளுக்கான அங்கிகாரத்தை வழங்க ஓர் இரகசிய குறியீட்டு இலக்கம் அவசியப்படுவதால் ஒட்டு மொத்தச் செயற்பாடும் பாதுகாப்பானதாகவும் பரபரப்பு அற்றதாகவும் அமைகின்றது.




தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு:

# SLT-MOBITEL நிதி அறிக்கைக்கு விருது

ஸ்ரீ லங்கா டெலிகொம் வருடாந்த நிதி அறிக்கை 2020க்கு மற்றுமொரு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. தெற்காசிய கணக்காளர் சம்மேளனத்தின் (SAFA) சிறந்த வருடாந்த நிதி அறிக்கை விருதுகள், ஒன்றிணைந்த அறிக்கையிடலுக்கான விருதுகள் மற்றும் கூட்டாண்மை ஆளுகை வெளிப்படுத்தல் 2020 போட்டிக்கான SAARC வருடபூர்த்தி விருதுகள் கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டது. 'தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு' என்பதன் பிரதான விருதை அறிக்கை வெற்றியீட்டியிருந்தது.

சர்வதேச கட்டமைப்புகளின் பிரகாரம், உயர் தரம் வாய்ந்த, பொருத்தமான, தங்கியிருக்கக்கூடிய மற்றும் தெளிவான தகவல்களை தமது நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தியுள்ளமையை இந்தக் கௌரவிப்புகள் உறுதி செய்துள்ளன.

இந்த ஆண்டுக்கான வைபவத்தை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் (ICASL) ஏற்பாடு செய்திருந்தது. நிதிக் கணக்கீடு மற்றும் வரி விதிப்பு பிரதி பொது முகாமையாளர் யு.எச். ரொட்ரிகோ, பொது உறவுகள் முகாமையாளர் உமேஷா சந்தரேனு ஆகியோர் ஸ்ரீ லங்கா டெலிகொம் சார்பாக விருதைப் பெற்றுக் கொள்வதைக் காணலாம்.

இந்தியா

# முதலிடத்தில் மோடி

## 23ஆவது இடத்தில் ஸ்டாலின்



இந்தியா முழுவதும் வெளிவரக் கூடிய பிரபல ஆங்கில நாளிதழ் ஒன்று அண்மையில் 'இந்தியாவின் சக்திவாய்ந்த 100 நபர்கள்' என்ற தலைப்பில் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தவகையில் குறித்த பட்டியலில் முதலிடத்தில் இந்தியப் பிரதமர் மோடியும், இரண்டாமிடத்தில் உட்துறை அமைச்சர் அமித்ஷாவும், மூன்றாம் இடத்தில் ஆர்.எஸ். எஸ். தலைவர் மோகன் பகவத்தும் இடம்பெற்றுள்ளனர்.

மேலும், கடந்த ஆண்டு 13ஆவது இடத்தில் இருந்த உ.பி. முதலமைச்சர் யோகி ஆதித்யா நாத் இவ்வாண்டுஆறோவது இடத்துக்கு முன்னேறி செல்வாக்கு மிக்கவர்கள் பட்டியலில் சாதனை புரிந்திருக்கிறார்.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இப்பட்டியலில் 23ஆவது இடத்தைப் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் மிகப்பெரும் அளவில் தொடர் வெற்றிகளை ஈட்டியதன் மூலம், அவர் இந்த இடத்தை அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மத்திய பிரதேசம்

# 2 தலைகள், 3 கைகளுடன் பிறந்த குழந்தை

இரண்டு தலைகள், மூன்று கைகளுடன் ஓர் ஆண்குழந்தை பிறந்துள்ள சம்பவம் மத்திய பிரதேசத்தில் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

மத்திய பிரதேசத்திலுள்ள ஜஓரா பகுதியைச் சேர்ந்த ஷாஹின் என்பவருக்கே 28 ஆம் திகதி குறித்த குழந்தை பிறந்துள்ளது.

ஆரம்பத்தில் அவரது வயிற்றை ஸ்கேன் செய்துபார்த்த வைத்தியர்கள் அவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கும் எனத் தெரிவித்திருந்த நிலையில், அவருக்கு இரண்டு தலைகள் மற்றும் மூன்று கைகளுடன் ஒரு குழந்தை பிறந்துள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்நிலையில் ஷாஹினின் உடல்நிலை மோசமாக இருப்பதால் அவர் தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் குழந்தை மருத்துவமனையில் அறுவைசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்துஅறுவை சிகிச்சை நிபுணர் 'ப்ரிஜேஷ் லஹோட்டி கூறுகையில், "உடலில், இரண்டு தலைகள் அருகருகே இருப்பதை மருத்துவ முறைப்படி dicephalic parapagus என்கிறனர். இதுபோன்ற நிலை மிகவும் அரிதானதுதான் என்றாலும், இப்படிப் பிறக்கும் குழந்தை பிழைக்கும் என்பது நிச்சயமற்றது என்பதால், ஆரம்ப நாள்களில் மருத்துவ கண்காணிப்பிலேயே வைக்கப்பட்டிருக்கும்" என்றார்.

மத்திய பிரதேசம்

# 15 வீடுகளை சூறையாடிய யானைகள்



சுமார் 15 வீடுகளை காட்டுயானைக் கூட்டமொன்று சூறையாடிய சம்பவம் சத்தீஷ்காரின் சுர்குஜாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சத்தீஷ்காரில் கோடை காலத்தில் தண்ணீர், உணவு தேடி வனப் பகுதியில் இருந்து யானைகள் கூட்டம், கூட்டமாக கிராமப் பகுதிகளை நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது,

இந்நிலையில் யானைக்கூட்டம், அண்மையில் சத்தீஷ்காரின் சுர்குஜா பகுதியில் உள்ள சுமார் 15 வீடுகளை சூறையாடிச் சென்றுள்ளதாகவும் இதனால் கிராம வாசிகள் இருப்பிடத்தை இழந்து தவித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூர்

# திடீரென உள்வாங்கிய கடல்



ஆறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூரில் திடீரென கடல் 200 மீற்றருக்கு நேற்றைய தினம் (03) உள்வாங்கியுள்ளதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்படுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடலின் அடியில் இருக்கக்கூடிய பாறைகளைத் தற்போது காண முடிவதாகவும் இதனால் பலர் அங்கு சென்று புகைப்படம் எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அமாவாசை அன்றும் இதே போல திருச்செந்தூரில் 100 மீற்றருக்கு கடல் நீர் உள்வாங்கிய நிலையில், தற்போது 200 மீற்றருக்கு உள்வாங்கியிருப்பது பக்தர்கள் மற்றும் பொது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



ராஜஸ்தான்

# கரௌலியில் ஊரடங்கு

ராஜஸ்தான் மாநிலம் கரௌலி நகரில், பாரம்பரிய புத்தாண்டு பேரணியின்போது, இரண்டு பிரிவினரிடையே நேற்று முன்தினம் (02) ஏற்பட்ட மோதலால், அந்நகரில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொலிஸார் கருத்துத் தெரிவிக்கையில் , "ஹிந்துப் புத்தாண்டின் முதல் நாளையொட்டி கரௌலியில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதியில் ஒரு பிரிவினர் இரு சக்கர வாகனப் பேரணியில் ஈடுபட்டனர்.

இதன் போது அவர்கள் மீது மர்ம நபர்கள் சிலர் கற்களை வீசியதால் இரு பிரிவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் சில இருசக்கர வாகனங்கள், கடைகள் என்பவற்றுக்குத் தீ வைக்கப்பட்டதோடு, கல்வீச்சில் 25க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். அவர்களில் 7 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தால் கரௌலியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 600க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்தனர்.

ஆந்திரா

# திருப்பதியில் பதற்றம்; அச்சத்தில் மக்கள்



ஆந்திர மாநிலம் திருப்பதி அருகே நேற்று முன்தினம்(02) நள்ளிரவு 1.10 மணியளவில் இலேசான நிலநடுக்கமொன்று ஏற்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 3.6 ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் இது திருப்பதியில் இருந்து வடகிழக்கே 85 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டதாகவுட" தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இந்நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக இதுவரை தகவல் வெளியாகவில்லை.



எம். செல்வராஜா



தேவைகள் இருக்கும் வரை, சேவைகள் தொடரும்

# விடியலை நோக்கிய பயணம்

**'ப்ரெண்ட்லி ஷிப்' அமைப்பின் இரண்டாவது ஆண்டு விழா இன்று**

'தன்னலமற்ற பணியுடன், சமூக விடியலை நோக்கிய பயணம்' என்ற மகுட வாசகத்துக்கு அமைய, துரிதமாகச் செயற்பட்டு வரும் 'ப்ரெண்ட்லி ஷிப்' என்ற சமூக அமைப்பின் இரண்டாவது ஆண்டு விழா, இன்று (04) கொண்டாடப்படுகின்றது.

பதுளையைத் தளமாகக் கொண்டியங்கும் 'ப்ரெண்ட்லி ஷிப்' அமைப்பு, 2020ஆம் ஆண்டு மனதாலும் சிந்தையாலும் ஒன்றிணைந்த நண்பர்கள் குழாமால் உருவாக்கப்பட்டதாகும். இனம், மதம், மொழி வேறுபாடுகளைக் கடந்து, 'மனிதம் ஒன்றே புனிதம்' என்ற வகையில், 'ப்ரெண்ட்லி ஷிப்' என்ற பெயருடன் இந்த அமைப்பு உதயமாகியது.

தன்னலமற்ற பணியுடன் சமூக விடியலை நோக்கிய பயணத்தில் தம்மையே அர்ப்பணித்துக் கொண்ட ஊவா மண்ணின் அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், சுயதொழில் செய்வோர், ஊடகத்துறையினர் மட்டுமன்றி, உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பவர்களையும் உள்வாங்கிய நிலையில் 30க்கும் மேற்பட்டவர்கள் ஒன்றிணைந்து, 2020இல் முதலாவது ஒன்றுகூடல் நிகழ்வு நடத்தப்பட்டது.

'ப்ரெண்ட்லி ஷிப்' அமைப்பின் யாப்பு, உத்தியோகபூர்வ இலட்சனை, குறிக்கோள், கீதம், கவிதை என்பவை உட்பட, அமைப்பின் அங்கத்தினர்கள் அனைவரும், ஆலோசனைச் சபை முன்னிலையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

'தன்னிறைவான சமூகம் உதயமாவதற்குப் பங்களிப்பை வழங்கும் தூய்மையான பயணம்' என்பதை தொலைநோக்காகவும், 'கல்வி, கலாசாரம், விளையாட்டு, பொருளாதாரம், திறன் அபிவிருத்தி போன்ற துறைகளில் எமது சமூகம் பூரணத்துவம் அடைவதற்கு, உணர்வுபூர்வமாகப் பங்களிப்பை வழங்குதல்' என்பது குறிக்கோளாகவும் கொண்டு இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.



இதயமொன்றை இரு கரங்கள் தாங்கி நிற்கும் 'ப்ரெண்ட்லி ஷிப்' அமைப்பின் இலட்சனை வெளிப்படுத்தும் பொருளானது, சமூக சேவைக்கான எண்ணத்தை இதயத்திலிருந்து உருவாக்கும் அதேவேளை, தோள் கொடுக்கும் தோழமைகளும் துவண்டுவிடாதவாறு, சமூக சேவையைத் தமது தார்மிகக் கடமையென எண்ணி, மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

'ப்ரெண்ட்லி ஷிப்' அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் எஸ். யசோதரராஜன், செயலாளர் எம்.எப். ஆரிஃபா, பொருளாளர் சி. அண்டன் ஜோய், துணைத்தலைவர் ஆர். லோசன பிரவின், துணைச் செயலாளர் டி.கிரிஷாந்த், கணக்காய்வாளர் டி. எல்ராய் பிராங்ளின் என்ற வகையில் அறுவரைக் கொண்ட நிர்வாக அமைப்பு வெற்றிகரமாக இயங்குகின்றது. அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரும் 'கெப்டன்' எனும் கௌரவ நாமத்தைக் கொண்டு அழைக்கப்படுகின்றனர். அத்துடன், அமைப்பின் ஊடகப் பிரிவும் அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றது.

மேலும், வணக்கத்துக்குரிய போதகர் கலைச்செல்வம் டேனியல், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மார்க்கண்டன் ரூபவதனன், சிரேஷ்ட சட்டத்தரணி க. ரமேஸ் குமார், பண்டாரவளை மாநகர சபை ஆணையாளர் த. கஜேந்திரகுமார், தொழிலதிபர் கே. சுரேஸ்குமார், சமூக ஆய்வாளர் வ. அந்தனீஸ் ஆகியோர் 'ப்ரெண்ட்லி ஷிப்' அமைப்பின் ஆலோசகர் சபையில் அங்கம் வகித்து, பெறுமதிமிக்க ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

ஊவாவில் அர்ப்பணிப்புடனான பல மனங்கள் சங்கமித்து, தோழமைகள் கரம் கோர்த்து, கட்டியெழுப்பிய 'தோழமையின் கப்பல்' என்ற 'ப்ரெண்ட்லி ஷிப்' குடும்பமாக








முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் ஒவ்வொன்றும், சமூகத்தின் அதிமுக்கிய தேவைகளாகவே அமைந்திருந்தன.

கொவிட்- 19 பெருந்தொற்றுப் பரவலின் போதான காலப்பகுதியில், வீடுகளில் முடங்கியிருந்த 200 குடும்பங்களுக்கு, நிவாரண உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொவிட் - 19 பெருந்தொற்றுப் பரவலால் பாதிக்கப்பட்ட சிறார்களை, அவர்களை அப்பாதிப்பில் இருந்து வெளிவருவதை ஊக்குவிக்கும் பொருட்டு, 2020இல் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, 'பூக்களின் இராணுவம்' என்ற தொனிப்பொருளில் 'சூம்' செயலியின் ஊடாக கொண்டாட்ட நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்குபற்றிய சகலருக்கும் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பண்டாரவளை, கல்பள்ளி முதியோர் காப்பகத்தில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டு, மரம் நடுகை வேலைத்திட்டமும், முதியோருக்கு மதிய உணவு வழங்கல், பாவனைப் பொருட்கள் வழங்கல், உலர் உணவுப் பொதிகள் வழங்கல் ஆகியன இடம்பெற்று, முதியோரை மகிழ்விக்கும் இசை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன.

பதுளை, ஹாலிஎலை, வேவல்ஹின்ன ஆகிய பகுதிகளில் இனங்காணப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு, சக்கர கதிரைகள் வழங்கப்பட்டதுடன், அவர்களது குடும்பத்தினருக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து வெலிமடை, பொரகஸ் ஸ்ரீ கணபதி இந்துக் கல்லூரி மாணவத் தலைவர்களுக்கான விசேட தலைமைத்துவ வதிவிடப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. 2020, 2021 களில் இரு தொகுதிகளாக தலைமைத்துவம் மற்றும் தொழில் வழிகாட்டல் பயிற்சி முகாம், துறைசார் சிறப்பு தேர்ச்சி பெற்ற வளவாளர்களைக் கொண்டு, இரு தின வதிவிட பயிற்சி முகாம் நடத்தபட்டு, பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

'ப்ரெண்ட்லி ஷிப்' யூத் டியூப் வலைத்தளம் மூலமாக 'கல்விக் களம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான செயலமர்வுகளும், தரம் 10, 11 வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பிரதான பாடங்களுக்கான செயலமர்வுகளும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் 'யூத் டியூப்' வலைத்தளம் ஊடாக முன்னெடுக்கப்பட்டன.

'கல்வி எனும் கருவியே, எமது சமூகத்தை வளம்படுத்தும் சிறந்த ஆயுதமாகும்' என்ற வகையில், ஹாலி-எலை செள். ஜேம்ஸ் தமிழ் வித்தியாலய சாதாரண தர மாணவர்களுக்கான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.



வறிய மாணவர்களுக்குத் தேவைப்படும் மூக்குக் கண்ணாடிகளை, வைத்திய ஆலோசனைகளின்படி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

'ப்ரெண்ட்லி ஷிப்' அமைப்பால் தொடரவிருக்கும் எதிர்கால வேலைத்திட்டங்களாக கல்வித்துறையில் மேம்பாடு, விளையாட்டுத் துறையை ஊக்குவித்தல், சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வீதி நாடகங்களை பரவலாக மேற்கொள்ளல், இரத்ததானம் வழங்க விரும்புபவர்களை ஒன்றுதிரட்டி, வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளுக்கேற்ப இரத்ததான நிகழ்வுகளை நடத்துதல், பிறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு, அவற்றை இலவசமாகவே பெற்றுக்கொடுத்தல், மாணவர்களது தலைமைத்துவ திறன்களை மேம்படுத்தும் நோக்கில், இலவச தலைமைத்துவப் பாசறைகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட தேவைப்படும் உடன் உதவிகள் ஆகியவற்றை முன்னெடுக்கவுள்ளது.



2021இல் மார்ச் 13ஆம் திகதி, 'ஊவா தமிழன்' தொலைக்காட்சி வழங்கிய 'ஊவாவின் அடையாளம்' என்ற விருதினை, ஊவாவில் வளர்ந்து வரும் சமூக அமைப்பான 'ப்ரெண்ட்லி ஷிப்' தட்டிக் கொண்டமையானது, இந்த அமைப்புக்கு குறுகிய காலத்தில் கிடைத்த மாபெரும் அங்கிகாரமாகும்.

எவ்வகையிலும், எந்தவோர் அரசியல் கலப்பின்றி, சமூக விடியலை மட்டுமே முன்னிலைப்படுத்திய வகையில், தன்னலமற்ற சமூக சேவைகளில், தேவைகள் இருக்கும் வரை சேவைகள் தொடர, 'ப்ரெண்ட்லி ஷிப்' அமைப்பு, மூன்றாவது அகவையில் காலடி வைத்துள்ளது.

தேவைகள் இருக்கும் வரை, சமூக சேவைகளை அர்ப்பணிப்புகளுடன் மேன்மேலும் தொடர, பதுளையை தளமாகக் கொண்டியங்கும் 'ப்ரெண்ட்லி ஷிப்' அமைப்பினர் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.





பாகிஸ்தான்

# பாராளுமன்றம் கலைப்பு

பாகிஸ்தானின் பொருளாதார வீழ்ச்சிக்கு பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசே காரணம் என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வந்தன.

குறிப்பாக இம்ரான்கான், அந்நாட்டின் பொருளாதாரம், வெளியுறவுக் கொள்கை போன்றவற்றில் மிகவும் தவறான முடிவுகளை எடுத்துள்ளதாகக் கூறி, பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் நவாஸ் முஸ்லிம் லீக் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 100 பேர், இம்ரான்கானுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானமொன்றை கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

இதையடுத்து, அந்நாட்டில் இம்ரான்கான் அரசுக்கு எதிராக, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதோடு, அதன் மீதான வாக்கெடுப்பு நேற்றைய தினம் (03) நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.



இந்நிலையில், நம்பிக்கையில்லா தீர்மானத்தை திடீரென நிராகரித்த துணை சபாநாயகர், அதனை சட்டவிரோதமானது என அறிவித்தார். இதனை அடுத்து, பிரதமர் இம்ரான் கானின் கோரிக்கையை ஏற்று, பாராளுமன்றத்தை கலைத்தும், மூன்று மாதங்களில் தேர்தலை நடத்தவும் ஜனாதிபதி ஆரிஃப் அல்வி உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, நம்பிக்கையில்லா தீர்மானம் நிராகரிப்பு, பாராளுமன்ற கலைப்பு உள்ளிட்ட அறிவிப்புகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தை நாட எதிர்க்கட்சிகள் முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா

## 14 வருடங்களாக விமான நிலையத்தில் வசிக்கும் நபர்




சீனாவைச் சேர்ந்த நபர் ஒருவர், கடந்த 14 வருடங்களாக விமான நிலையத்தில் வசித்து வரும் சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனத் தலைநகர் பெய்ஜிங்கை சேர்ந்த வீ ஜியாங்குவோ என்பவரே இவ்வாறு விமான நிலையத்தில் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், “எனக்கு மது அருந்தும் பழக்கமும் புகைப் பிடிக்கும் பழக்கமும் உள்ளது. எனினும் இதற்கு எனது குடும்பத்தினர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக, நான் வீட்டில் தங்க விரும்பினால் புகைப்பதையும் குடிப்பதையும் விட்டுவிட வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாவிட்டால் என்னுடைய மாதாந்த அரசு உதவித் தொகையான 1,000 யுவான் (150 அமெரிக்க டொலர்) அவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் கூறுகின்றனர்.

பணத்தை அவர்களிடம் கொடுத்து விட்டால், மது மற்றும் சிகரெட் செலவுக்கு நான் என்ன செய்ய முடியும்? அதனால் தான் விமான நிலையத்தில் வசித்து வருகின்றேன். ஆரம்பத்தில் நான் விமான நிலையத்தில் தங்குவதற்கு அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்தனர். எனினும், நாளடைவில் அதிகாரிகள் என்னைத் தொந்தரவு செய்வதை விட்டுவிட்டனர்” என்றார்.





உக்ரேன்

2 வாரங்களாக தேடப்பட்டு வந்த

## ஊடகவியலாளர் சடலமாக மீட்பு

உக்ரேன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரானது, 39ஆவது நாளாகத் தொடர்ந்து நீடித்து வருகின்றது.

இந்நிலையில் உக்ரேனில் இடம்பெற்று வரும் போரைப் படம் எடுக்கச் சென்ற அந்நாட்டு பிரபல ஊடகவியலாளரான மக்ஸிம் லெவினின் சடலம் உக்ரேனின் கீவ் நகரில் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாக அவர் தேடப்பட்டு வந்த நிலையில், அவரது சடலம் போர்க்களத்தில் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பிரித்தானியா


## புதிதாகத் தலை தூக்கியுள்ள ‘XE’

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

உலக நாடுகளை, சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக கொரோனாத் தொற்றுப் பரவலானது கதிகலங்க வைத்து வருகின்றது.

இந்நிலையில், இத் தொற்றுப் பரவலில் இருந்து உலக நாடுகள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி வரும் நிலையில், தற்போது பிரித்தானியாவில் ‘XE’ என்ற உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், இத்தொற்றால் இதுவரை 637 பேருக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எவ்வாறு இருப்பினும், வேறு எந்த நாட்டிலும் இப்புதிய வகை கொரோனா வைரஸானது கண்டறியப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பெரு

## மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல்



பெருவில் எரிபொருள் விலை உயர்வை கண்டித்து நடத்தப்பட்ட போராட்டத்தில், பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கலவரம் வெடித்தது.

பெருவில் எரிபொருள், உரம் உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வை கண்டித்து, திங்கட்கிழமை (28) முதல் கனரக வாகனங்களின் சாரதிகள், நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக, அந்நாட்டு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய விவசாயிகள், வாகனஓட்டிகள் உட்பட பொதுமக்கள் வீதிகளில் பேரணியாகச் சென்று, தமது எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற பேரணியில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே வெடித்த மோதலில், பொலிஸார் மீது கற்களை வீசி பொது மக்கள் தாக்குதல் நடத்தினர். பொலிஸாரும் கண்ணீர் புகை வீசி, தடியடி நடத்தி பொது மக்களை விரட்டியடித்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேஸிலில்

## நிலச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழப்பு

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ மாகாணத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாக, அப்பகுதிகளில் வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், நிலச்சரிவில் சிக்கி இதுவரை எட்டு குழந்தைகள் உட்பட 14 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 5 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், காணாமற்போயுள்ளவர்களை மீட்கும் பணியில் அந் நாட்டு இராணுவமும் மீட்புப் படையயினரும் ஈடுபட்டுள்ளனர்.




# உலகக் கிண்ணம்: சம்பியனான அவுஸ்திரேலியா

நியூசிலாந்தில் நடைபெற்று வந்த சர்வதேச கிரிக்கெட் சபையின் பெண்களின் உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியா சம்பியனானது.

கிறைஸ்ட்சேர்ச்சில் நேற்று நடைபெற்ற இங்கிலாந்துடனான இறுதிப் போட்டியில் வென்றே ஏழாவது தடவையாக அவுஸ்திரேலியா சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவி ஹீதர் நைட், அவுஸ்திரேலியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, அலைஸா ஹீலியின் 170 (138), றேச்சல் ஹெய்ன்ஸின் 68 (93), பெத் மூனியின் 62 (47) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 356 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில், அன்யா ஷெர்ஷோபிள் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்கு, 357 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சார்பாக, நட் ஷிவர் ஆட்டமிழக்காமல் 148 (121) ஓட்டங்களைப் பெற்றபோதும், 43.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 285 ஓட்டங்களையே பெற்று 71 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், அலனா கிங், ஜெஸ் ஜொனாசென் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், மேகன் ஸ்கட் 2 விக்கெட்டுகளையும், தஹிலா மெக்ராத், அஷ்லெய் கார்ட்னர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் நாயகியாகவும், தொடரின் நாயகியாகவும் அலைஸா ஹீலி தெரிவானார்.

ஐ.பி.எல்:

# டெல்லியை வென்ற குஜராத்




இந்தியன் பிறீமியர் லீக்கில், பூனேயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான போட்டியில் குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட குஜராத், ஷுப்மன் கில்லின் 84 (46) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், முஸ்தஃபிசூர் ரஹ்மான் 4-0-23-3 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு, 172 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி சார்பாக அணித்தலைவர் றிஷப் பண்ட் 43 (29) ஓட்டங்களைப் பெற்றபோதும் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களையே பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், லொக்கி பெர்கியூசன் 4-0-28-4, மொஹமட் ஷமி 4-0-30-2, ஹர்டிக் பாண்டியா 4-0-22-1, ரஷீட் கான் 4-0-30-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக லொக்கி பெர்கியூசன் தெரிவானார்.

இந்நிலையில், மும்பையில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் மும்பை இந்தியன்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றிருந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட ராஜஸ்தான், ஜொஸ் பட்லரின் 100 (68), ஷிம்ரோன் ஹெட்மயரின் 35 (14), சஞ்சு சாம்ஸனின் 30 (21) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜஸ்பிரிட் பும்ரா 4-0-17-3, தைமல் மில்ஸ் 4-0-35-3 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 194 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை சார்பாக திலக் வர்மா 61 (33), இஷன் கிஷனின் 54 (43) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களையே பெற்று 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், யுஸ்வேந்திர சஹால் 4-0-26-2, ட்ரெண்ட் போல்ட் 4-0-29-1, இரவிச்சந்திரன் அஷ்வின் 4-0-30-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஜொஸ் பட்லர் தெரிவானார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில்

## அவுஸ்திரேலியாவை வீழ்த்திய பாகிஸ்தான்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் இந்த ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியாவும், இரண்டாவது போட்டியில் பாகிஸ்தானும் வென்றிருந்த நிலையில் லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றமையத் தொடர்ந்தே 2-1 என தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

அவுஸ்திரேலியா: 210/10 (41.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: அலெக்ஸ் காரி 56 (61), ஷோன் அபொட் 49 (40), பென் மக்டர்மூட் 36 (50), கமரொன் கிறீன் 34 (47) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹரிஸ் றாஃப் 3/39, மொஹமட் வாஸிம் 3/40, ஷகீன் ஷா அஃப்ரிடி 2/40, இஃப்திஹார் அஹ்மட் 1/38, ஸஹிட் மஹ்மூட் 1/51)

பாகிஸ்தான்: 214/1 (37.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் ஆ.இ 105 (115), இமாம்-உல்-ஹக் 89 (100) ஓட்டங்கள். பந்துவீச்சு: நாதன் எலிஸ் 1/38)

போட்டியின் நாயகன்: பாபர் அஸாம் தொடரின் நாயகன்: பாபர் அஸாம்






தம்பலகாமம் பிரதேச கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் தொடர்:

## சம்பியனான சிராஜ் அணி

எஃப். முபாரக்

தம்பலகாமம் பிரதேச கழகங்களுக்கிடையிலான நடாத்தப்பட்ட கிரிக்கெட் தொடரில் சிராஜ் அணி சம்பியனானது.

இறுதிப் போட்டியில், சென்றல் அணியை வென்றே சிராஜ் அணி சம்பியனாகியிருந்தது.

பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க இப்போட்டிகள் இடம்பெற்றதுடன், விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம். ஹாரிஸ் நெறிப்படுத்தியிருந்தார்.

# ஊரடங்கில்...



## காத்தான்குடியில்..



ஊரடங்குச் சட்டம் காரணமாக, காத்தான்குடி நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. மக்களின் நடமாட்டமும் வாகனங்களும் இன்றி, பிரதான வீதிகள் காணப்பட்டன. இராணுவமும் பொலிஸாரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். (எம்.எஸ்.எம். நூர்தீன்)







## ஒக்லன்டில்..

'நியூசிலாந்து' ஒக்லன்ட் நகரிலுள்ள இலங்கையர்கள், இலங்கை மக்களுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தினர்.

## அம்பாறையில்...



அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஊரடங்குச் சட்டத்தை, மக்கள் முழுமையாக மதித்து நடந்துகொண்டனர். குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான கல்முனை, காரைதீவு, சாய்ந்தமருது, நிந்தவூர், சம்மாந்துறை, அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில், மக்கள் வீடுகளில் முடங்கியிருந்ததுடன் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

(படங்கள்: நூருள் ஹுதா உமர்)







## திருகோணமலையில்...

திருகோணமலை நகரில் ஊரடங்கு சற்று தளர்வுடன் அமல்படுத்தப்பட்டது. குறிப்பாக வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் பயணிக்க பொலிஸாரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதேவேளை, அபயபுரசந்தி, 4ஆம் கட்டை பகுதிகளில் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள், பொலிஸாரால் அகற்றப்பட்டன. (படங்கள்: ஏ.எம் கீத்)

## மட்டக்களப்பு நகரில்...

மட்டக்களப்பு மாவட்டத்தில், ஊரடங்குச் சட்டம் மிகவும் கடுமையான முறையில் அமல்படுத்தப்பட்டது. மாவட்டதிலுள்ள அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் காரியாலயங்கள், வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள், சுப்பர் மார்க்கட், தனியார் நிலையங்கள், அறநெறிப் பாடசாலைகள் உள்ளிட்ட அனைத்தும் மூடப்பட்டிருந்தன. வீதிகள் அனைத்தும் வெறிச்சோடியிருந்தன. எனினும், ஆங்காங்கே சில இடங்களில், மரக்கறிகளை விற்பனை செய்யும் சிறிய கடைகள் திறந்திருந்தன.

அதேவேளை, மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் களுவாஞ்சிகுடி சந்தியில், பொலிஸாரால் புதிதாக வீதித் தடைகள் இடப்பட்டு, அவ்வப்போது வரும் வாகனங்களும் பொதுமக்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

(படங்கள்: வா. கிருஸ்ணா, வ. சக்தி)







## அவுஸ்திரேலியாவில்...






இலங்கையின் தற்போதைய நிலைமைக்கு எதிராக, அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கையர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மெல்போர்ன், சிட்னி, பிரிஸ்பேன், பேர்த் ஆகிய நகரங்களிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

## மலையக நகரங்களில்...








மலையக நகரங்கள் நேற்று (3) வெறிச்சோடிக் காணப்பட்டன.

பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர். சில இடங்களில் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அத்தியாவசிய சேவை, சிகிச்சை பெறுவதற்காகச் செல்லும் வாகனங்கள் மாத்திரம் சோதனைக்கு உட்படுத்தி அனுமதிக்கப்பட்டிருந்தன.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களில், ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும், எரிபொருட்கள் நிரப்பப்பட்டன. திருமண நிகழ்வுகள், குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் மாத்திரம் பங்கு கொள்ளும் வகையில் அனுமதிக்கப்பட்டிருந்தன. (மலைவாஞ்ஞன்)





## மன்னாரில்...

ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டமையால், மன்னார் மாவட்டத்தின் இயல்புநிலை ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

எனினும், அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு, அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வீதிகள், பொதுஇடங்களில் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன், உரிய அனுமதியின்றி வீதிகளில் நடமாடியோர் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

(எஸ். றொசேரியன் லெம்பேட்)






## ஊரடங்கில் ஆர்ப்பாட்டம்

சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களால் கினிகத்ஹேன நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்தபோதும் நேற்று (03) முன்னெடுக்கப்பட்டது.

(படம்: ரஞ்சித் ராஜபக்ஷ)





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 04 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.